
# சோதிட மலர்

## SOTHIDA MALAR



உள்ளே............

✻ தமிழ்நாடு முதலமைச்சரின் ஜாதக ஆய்வு

✻ நான் செல்வந்தனுயிருப்பேனு? ✻ சோதிடம் கற்போம்

✻ உயர்கல்விப் பலன் உண்டா? ✻ உள்ளங்கையின் பலன்

இன்னும் பல

ரக்தாக்ஷி ஸ்ரீ கார்த்திகை மீ (16-11-84—14-12-84) ரூபா: 3-00

சர்வ சுகந்தி சுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
சித்த சுராசுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

❋

● நலமும், கேடும் கலந்துள்ளது உலகம். பற்றுடைய மக்களுக்கு அது இன்ப துன்பங்களை விளைவிக்கின்றது. பற்றற்ற ஞானிக்கு அதனுல் இன்ப துன்பங்கள் உண்டாவதில்லை.

● பொருட்களை நினைப்பதால் ஆசையும் ஆசையால் சினமும், சினத்தால் மனக்குழப்பமும், குழப்பத்தால் நினைவின்மையும், நினைவின்மையால் புத்தி நாசமும் உண்டாகிறது. இதனுல் மனிதனே அழிகிருன்.

● பற்றற்று, பயமற்று சினமற்றிருக்கும் மனதே சீரிய மனமாகின்றது. மனம் தெளிவடைதலும் இன்ப துன்பங்களை நிகராக, சமமாக நினைத்தலும் நிறைந்த ஞானமுள்ளவனின் லக்ஷணமாகும்.

❁

அரசம் விதை கண்ணுக்குத் தென்படாது மிக நுட்பமாக ஒரு கோபுரத்தின் கட்டிடத்தின் இடுக்கில் விழுகிறது. அது வேர்விட்டுச் செடியாகி மரமாகிக் கட்டிடத்தையே பெயர்த்துத் தள்ளிவிடுகிறது. மன எண்ணமும் அவ்வளவு நுண்ணியதாக உள்ளத்தில் புகுந்து பெரியதாகப் பரிணமித்து, மனமுடைய மனிதனையே மாற்றிவிடுகிறது: மனிதனில் உண்டாகும் எண்ணமே அவனை மேலோனுகவும், கீழோனுகவும் மாற்றிவிடும் வல்லமையுடையதாயிருக்கிறது. மனம் சாத்விகமாவதற்கு தெய்வீக சிந்தனையே சிறந்ததாகும்.


உ

# சோதிடமலர்

SOTHIDA MALAR

சோதிட மாத சஞ்சிகை

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

ரக்தாக்ஷி ௵ கார்த்திகை ௴
(16 - 11 - 84)

மலர் 7 | இதழ் 8


## உள்ளே......................


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | நாள் எப்படி? ... | 2 |
| 2 | உதயலக்கினம் காணும் பதகம் ... | 4 |
| 3 | கார்த்திகை மாதக் கிரகநிலை ... | 5 |
| 4 | கால ஹோரைகள் ... | 6 |
| 5 | கார்த்திகை மாத வானியற்காட் ... | 8 |
| 6 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? ... | 9 |
| 7 | அதிஷ்ட எண் ஞானம் ... | 18 |
| 8 | ஆய்வு மன்றம் ... | 20 |
| 9 | உள்ளத்தைக் காட்டும் உள்ளங் ... | 21 |
| 10 | நான் செல்வந்தனுயிருப்பேனு? ... | 22 |
| 11 | தமிழ்நாடு முதல்வரின் ஜாதகம் ... | 23 |
| 12 | அயனும்சம் ... | 25 |
| 13 | அன்னையைக் கண்டேன் ... | 26 |
| 14 | மாறி அமைந்த நட்சத்திர ஒழுங் ... | 28 |
| 15 | சந்தேக நிவிர்த்தி ... | 29 |
| 16 | சோதிடம் கற்போம் ... | 30 |
| 17 | குறுக்கெழுத்துப் போட்டி ... | 32 |

# நாள் எப்படி?

கார் 1 வெ (16-11-84) அஷ்டமி இரவு *11-37* வரை, ஆயிலியம் பகல் *11-42* வரை, மரணம், சுபதினம் ராகு 10-38 — 12-08

கார் 2 சனி (17-11-84) நவமி இரவு *9-32* வரை, மகம் பகல் *10-31* வரை, அமிர்தசித்தம், சுபதின மன்று. ராகு 9-08 — 10-38

கார் 3 ஞா (18-11-84) தசமி இரவு *7-01* வரை, பூரம் காலை *8-55* வரை, சித்தாமிர்தம், காலை *8-55* இன் மேல் முக்கிய கருமங்களைச் செய்யலாம். ராகு 4-39 — 6-09

கார் 4 திங் (10-11-84) ஏகதாசி மாலை *4-16* வரை, உத்தரம் - மரணம் காலை *7-00* மணிவரை, அத்தம் - சித்தம் பி. இ. *4-49* வரை, ஸர்வஏகாதசி, கரிநாள். காலை 7மணியின்மேல் அவசிய கருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 7-39 — 9-09

கார் 5 செவ் (20-11-84) துவாசி பகல் *1-18* வரை, சித்திரை பி. இ. *2-31* வரை, சித்தம், பிரதோஷவிரதம். வயல், தோட்டச் செய்கைகள் மேற்கொள்ளலாம். ராகு 3-10 — 4-10

கார் 6 புத (21-11-84) திரயோதசி பகல் *10-14* வ. சுவாதி இரவு *12-13* வரை, சித்தம். முக்கிய கருமங்கள் செய்யலாம் ராகு 12-10 — 1-40

கார் 7 வியா (22-11-84) சதுர்த்தி காலை *7-15* வரை, அமாவாசை பி.இ. *4-28* வரை, சித்தம், அமாவாசை விரதம். சுபதினம். ராகு 1-41 — 3-11

கார் 8 வெ (23-11-84) பிரதமை இரவு *12-03* வரை, அனுஷம் - சித்தம் இரவு *8-14* வரை, சுபகருமங்கள் செய்யலாம். ராகு 10-41 — 12-11

கார் 9 சனி (24-11-84) துவிதியை இரவு *12-03* வ. கேட்டை இரவு *6-50* வரை, சித்தம், சந்திரதரிசனம். முக்கிய கருமங்களை மேற்கொள்ளலாம். ராகு 9-12 — 10-42

கார் 10 [illegible] (25-11-84) திரிதியை இரவு *10-41* வ. மூலம் மாலை *6-00* வரை, அமிர்தசித்தம், கரிநாள். சுபதினமல்ல. ராகு 4-42 — 6-12

கார் 11 திங் (26-11-84) சதுர்த்தி இரவு *10-07* வ, பூராடம் மாலை *5-50* வரை, மரணம், சதுர்த்தி விரதம். சுபதினம், ராகு 7-42 — 9-12

கார் 12 செவ் (27-11-84) பஞ்சமி இரவு *10-07* வ, உத்தராடம் - மரணம் மாலை *6-23* வரை, சுபதின மன்று. ராகு 3-13 — 4-43

கார் 13 புத (28-11-84) ஷஷ்டி இரவு *10-58* வரை, திருவோணம் – சித்தம் இரவு *7-41* வரை, ஷஷ்டி விரதம். சுபகருமங்கள் செய்யலாம், ராகு 12-13 — 1-43

கார் 14 வியா (29-11-84) ஸப்தமி இரவு *12-32* வ. அவிட்டம்-சித்தம் இரவு *9-40* வரை, சுபகருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 1-44 — 3-14

கார் 15 வெ (30-11-84) அஷ்டமி பி.இ. *2-38* வ. சதயம் இரவு *12-12* வரை, சித்தம்; சுபதினம். ராகு 10-44 — 12-14

கார் 16 சனி (1-12-84) நவமி பி. இ. *5-07* வரை, பூரட்டாதி - மரணம் பி.இ. *3-05* வரை, சுபதினம் ராகு 9-15 — 10-45

கார் 17 ஞாயி (2-12-84) தசமி முழுவதும், உத்தரட்டாதி பி.இ. *6-06* வரை, கரிநாள். ராகு 4-45 — 6-15

கார் 18 திங் (3-12-84) தசமி காலை *7-44* வரை, ரேவதி முழுவதும், சித்தம், சுபகருமங்கள் செய்யலாம். ராகு 7-45 — 9-15

கார் 19 செவ் (4-12-84) ஏகதாசி பகல் *10-15* வ, ரேவதி காலை *9-04* வரை, அமிர்தம், ஸர்வஏகாதசி வயற்செய்கைக்கு உகந்த தினம். ராகு 3-16 — 4-46

கார் 20 புத (5-12-84) துவாதசி பகல் *12-30* வ, அசுவினி-மரணம் பகல் *11-46* வரை, பிரதோஷ விரதம், அசுபதினம். ராகு 12-17 — 1-47

கார் 21 வியா (6-12-84) திரயோதசி பகல் *2-19* வ, பரணி-சித்தம் பகல் *2-05* வரை, திருக்கார்த்திகை விரதம், குமாராலயதீபம். சுபகருமங்களுக்கு ஏற்றதல்ல. ராகு 1-47 — 3-17

கார் 22 வெ (7-12-84) சதுர்த்தசி பகல் *3-37* வ, கார்த்திகை-சித்தம் பகல் *3-54* வரை, ஸர்வாலயதீபம். பகல் *3-54* இன்மேல் முக்கிய கருமங்களை மேற்கொள்ளலாம். ராகு 10-47 – 12-17

கார் 23 சனி (8-12-84) பூரணை மாலை *4-24* வரை, ரோகிணி மாலை *5-13* வரை, அமிர்தசித்தம், பூரணை

விரதம். சுபகருமங்கள் செய்யலாம்.
ராகு 9-18 — 10-48

கார் 24 ஞாயி (9-12-84) பிரதமை மாலை 4-39 வ, மிருகசீரிடம் மாலை 6-01 வரை, சித்தம், விநாயக விரதாரம்பம். முக்கிய கருமங்கள் மேற்கொள்ள லாம். ராகு 4-49 – 6-19

கார் 25 திங் (10-12-84) துவிதியை மாலை 4-25 வ. திருவாதிரை மாலை 6-21 வரை, சித்தாமிர்தம். அவசிய கருமங்கள் செய்யலாம்.
ராகு 7-49 — 9-19

கார் 26 செவ் (11-12-84) திரிதியை பகல் 3-45 வ, புனர்பூசம் மாலை 6-16 வரை, சித்தம். தோட்டச் செய்கைகள் செய்ய நலம். ராகு 3-20 — 4-50

கார் 27 புத (12-12-84) சதுர்த்தி பகல் 3-02 வ, பூசம் மாலை 5-50 வரை, சித்தம். சுபதினமன்று ராகு 12-20 – 1-50

கார் 28 வியா (13-12-84) பஞ்சமி பகல் 1-22 வரை. ஆயிலியம் மாலை 5-06 வரை, சித்தாமிர்தம், அசுபதினம். ராகு 1-51—3-21

கார் 29 வெ (14-12-84) ஷஷ்டி பகல் 11-45 வரை, மகம்-மரணம் மாலை 4-06 வரை, சுப தினமல்ல. ராகு 10-51—12-21

# இம்மாத விசேடம்

## திருக்கார்த்திகை மகிமை

கார்த்திகை மாதப் பௌர்ணமியன்று சந்திரன் கார்த்திகை நட்சத்திரத்திலிருக்கும் சமயம் கொண்டாடப்படும் இவ்விழா கார்த்திகை மாதத்திற்குச் சிறப்பானதாகும். கார்த்திகை நட்சத்திரத்துடன் பூரணை சேர்ந்தால் பத்ம யோகம் எனவும், ரோகிணியுடன் சேரும்போது மகா கார்த்திகையெனவும் அழைக்கப்படும். இத்தினம் திருக்கார்த்திகை விரதம், கார்த்திகைத் தீபம், விளக்கீடு எனப் பலவாறாக கூறப்படுகிறது. திருமாலுக்கும் பிரம்ம தேவருக்கும் இடையே ஏற்பட்ட விவாதத்தை நீக்குவதற்காக இறைவன் சோதி ரூபமாகத் தோன்றியபோது ''இச் சோதிரூபத்தை என்றும் எமக்குக் காட்டியருள வேண்டும்'' என்றும் பிரார்த்தித்தார்கள். இறைவனும் அதற்கிசைந்து ''கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் காட்டுவோம்', என்றருளினார். இச்சோதியைக் குறிப்பதற்காகவே எங்கும் விசேடமாக விளக்கேற்றப்படுகிறது. கார்த்திகை நட்சத்திரம் முருகனுக்குரியதாய் முருகன் ஆலயங்களில் விசேடமாக மாதக்கார்த்திகையிலும் பார்க்கச் சிறப்பாக அனுட்டிக்கப்படுகிறது. எமது உடலை ஒரு மனையாகவும், உள்ளத்தை பாத்திரமாகவும் கொண்டு அதில் உணர்வெனும் நெய்யையூற்றி உயிரெனும் திரியையிட்டு பிராணன் எனும் காற்றை நிறுத்தி அறிவுச்சுடரை அன்பினால் தூண்டிக்கொண்டிருந்தால் ஆணவமாகிய இருள் அகன்று சிவபரஞ்சோதியைக் காணலாம். இதுவே கார்த்திகைத் தீபத்தின் உண்மைத் தத்துவமாகும்.

## சோமவார விரதம்

இவ்விரதம் கார்த்திகை மாத முதற் சோமவாரந் (திங்கட்கிழமை) தொடக்கம் ஒவ்வோர் சோமவாரமும் சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கப்படவேண்டியதாகும். அன்று முழுதும் உபவாசமிருந்து மறுநாள் பாறணைசெய்தல் உத்தமமாகும். அன்றியும் பகல் விரதமிருந்து இரவு போசனம்செய்வதும் மத்திம பலனாகும். இவ்விரதம் வாழ்நாள் முழுவதும் அல்லது 12 வருடம், 3 வருடம், 1 வருடம் வரை அனுட்டிப்பதும் அல்லது ஒவ்வோர் கார்த்திகை மாதத்தில் வரும் சோமவாரங்களில் மட்டும் அனுஷ்டிப்பதும் இயல்புக்குகந்ததாகும். இவ்விரதத்தை அனுட்டித்து சந்திரன், வசிட்டர், சோமசன்மர் முதலிய முனி சிரேஷ்டர்கள் செல்வம், புத்திரப்பேறு, என்பன வற்றைப் பெற்றுய்வடைந்தனர் எனப்புராணங்கள் கூறுகின்றன.

## விநாயக விரதாரம்பம்

கார்த்திகை மாதக் கிருஷ்ணபக்ஷப் பிரதமை முதல் மார்கழி மாதச் சஷ்டி வரையுள்ள இருபத்தொருதினங்களும் விநாயகப்பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் இவ்விரதம் பிள்ளையார்கதை எனவும் பெருங்கதை எனவும் அழைக்கப்பெறும். விஷ்ணுபரமாத்மா பொய்ச்சாட்சி சொல்லியதற்காக உமாதேவியாரால் குருட்டுப்பாம்பாகச் சபிக்கப்பெற்றுப் பின் விநாயகரைக் குறித்துச் செய்த தவத்தினால் சாபம் நீங்கப்பெற்றவராய் விளங்கினார். இவ்வாறு சாபநீக்கம் பெற்றதினம் மார்கழி மாத பூர்வசஷ்டித் திதியாகும். இத்தினத்தைக் குறித்து ஆரம்பிக்கப்படும் தினமே கார்த்திகை மாத விநாயகசஷ்டி விரதாரம்பமாகும். இத்தினங்களில் விநாயகரின் அருள்வரலாறு குறித்த பிள்ளையார்கதை படிப்பதும், கரும்புமிளநீரும் காரெள்ளும் தேனும் அவல் பழமும் நிவேதனஞ் செய்வதும் இவ்விரதமனுஷ்டிப்போரின் வழமையாகும்.

''தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதிலெப் [பொழுதும்
கொண்டக்கால் வாராது கூற்று''

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)


ரக்தாக்ஷி ஸ்ரீ கார்த்திகை மீ 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை. (16-11-84 முதல் 14-12-84 வரை)

| இங் நவம் | தமி ஐப்ப | வாரம் | விருச்சி ம.மி. முதல் (காலை) | விருச்சி ம.மி. வரை (காலை) | தனுசு ம. மி. வரை (காலை) | மகரம் ம. மி. வரை (பகல்) | கும்பம் ம. மி. வரை (பகல்) | மீனம் ம. மி. வரை (பி.ப) | மேடம் மி. ம. வரை (மாலை) | இடபம் ம. மி. வரை (இரவு) | மிதுன ம. மி. வரை (இரவு) | கடகம் ம. மி. வரை (இரவு) | சிங்கம் ம. மி. வரை (பி.இ) | கன்னி ம. மி. வரை (பி.இ) | துலா ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | வெள் | 6 08 | 8 17 | 10 25 | 12 21 | 2 06 | 3 49 | 5 38 | 7 14 | 9 52 | 11 59 | 2 00 | 3 59 | 6 03 |
| 17 | 2 | சனி | 6 03 | 8 12 | 10 20 | 12 16 | 2 01 | 3 44 | 5 33 | 7 36 | 9 47 | 11 54 | 1 55 | 3 54 | 5 58 |
| 18 | 3 | ஞாயி | 5 58 | 8 09 | 10 17 | 12 13 | 1 58 | 3 41 | 5 30 | 7 33 | 9 44 | 11 51 | 1 52 | 3 51 | 5 55 |
| 19 | 4 | திங் | 5 55 | 8 05 | 10 13 | 12 09 | 1 54 | 3 37 | 5 26 | 7 29 | 9 40 | 11 47 | 1 48 | 3 47 | 5 51 |
| 20 | 5 | செவ் | 5 51 | 8 01 | 10 09 | 12 05 | 1 50 | 3 33 | 5 22 | 7 25 | 9 36 | 11 43 | 1 44 | 3 43 | 5 47 |
| 21 | 6 | புதன் | 5 47 | 7 57 | 10 05 | 12 01 | 1 46 | 3 29 | 5 18 | 7 21 | 9 32 | 11 39 | 1 40 | 3 39 | 5 43 |
| 22 | 7 | வியா | 5 43 | 7 53 | 10 01 | 11 57 | 1 42 | 3 25 | 5 14 | 7 17 | 9 28 | 11 35 | 1 36 | 3 35 | 5 39 |
| 23 | 8 | வெள் | 5 39 | 7 49 | 9 57 | 11 53 | 1 38 | 3 21 | 5 10 | 7 13 | 9 24 | 11 31 | 1 32 | 3 31 | 5 35 |
| 24 | 9 | சனி | 5 35 | 7 45 | 9 53 | 11 49 | 1 34 | 3 17 | 5 06 | 7 09 | 9 20 | 11 27 | 1 28 | 3 27 | 5 31 |
| 25 | 10 | ஞாயி | 5 31 | 7 41 | 9 49 | 11 45 | 1 30 | 3 13 | 5 02 | 7 05 | 9 16 | 11 23 | 1 24 | 3 23 | 5 27 |
| 26 | 11 | திங் | 5 27 | 7 36 | 9 44 | 11 40 | 1 25 | 3 08 | 4 57 | 7 00 | 9 11 | 11 18 | 1 19 | 3 18 | 5 22 |
| 27 | 12 | செவ் | 5 22 | 7 31 | 9 39 | 11 35 | 1 20 | 3 03 | 4 52 | 6 55 | 9 06 | 11 13 | 1 14 | 3 13 | 5 17 |
| 28 | 13 | புதன் | 5 17 | 7 29 | 9 37 | 11 33 | 1 18 | 3 01 | 4 50 | 6 53 | 9 04 | 11 11 | 1 12 | 3 11 | 5 15 |
| 29 | 14 | வியா | 5 15 | 7 25 | 9 33 | 11 29 | 1 14 | 2 57 | 4 46 | 6 49 | 9 00 | 11 07 | 1 08 | 3 07 | 5 11 |
| 30 | 15 | வெள் | 5 11 | 7 22 | 9 30 | 11 26 | 1 11 | 2 54 | 4 43 | 6 46 | 8 57 | 11 04 | 1 04 | 3 04 | 5 08 |
| 1 | 16 | சனி | 5 08 | 7 18 | 9 26 | 11 22 | 1 07 | 2 50 | 4 39 | 6 42 | 8 53 | 11 00 | 1 00 | 3 00 | 5 04 |
| 2 | 17 | ஞாயி | 5 04 | 7 13 | 9 21 | 11 17 | 1 02 | 2 45 | 4 34 | 6 37 | 8 48 | 10 55 | 12 55 | 2 55 | 4 59 |
| 3 | 18 | திங் | 4 59 | 7 09 | 9 17 | 11 13 | 12 58 | 2 41 | 4 30 | 6 33 | 8 44 | 10 51 | 12 51 | 2 51 | 4 55 |
| 4 | 19 | செவ் | 4 55 | 7 06 | 9 14 | 11 10 | 12 55 | 2 38 | 4 27 | 6 30 | 8 41 | 10 48 | 12 48 | 2 48 | 4 52 |
| 5 | 20 | புதன் | 4 52 | 7 02 | 9 10 | 11 06 | 12 51 | 2 34 | 4 23 | 6 26 | 8 37 | 10 44 | 12 44 | 2 44 | 4 48 |
| 6 | 21 | வியா | 4 48 | 6 58 | 9 06 | 11 02 | 12 47 | 2 30 | 4 19 | 6 22 | 8 33 | 10 40 | 12 41 | 2 40 | 4 44 |
| 7 | 22 | வெள் | 4 44 | 6 54 | 9 02 | 10 58 | 12 43 | 2 26 | 4 15 | 6 18 | 8 29 | 10 36 | 12 37 | 2 36 | 4 40 |
| 8 | 23 | சனி | 4 40 | 6 50 | 8 58 | 10 54 | 12 39 | 2 22 | 4 10 | 6 14 | 8 25 | 10 32 | 12 33 | 2 32 | 4 36 |
| 9 | 24 | ஞாயி | 4 36 | 6 46 | 8 54 | 10 50 | 12 35 | 2 18 | 4 06 | 6 10 | 8 21 | 10 28 | 12 29 | 2 28 | 4 32 |
| 10 | 25 | திங் | 4 32 | 6 43 | 8 51 | 10 47 | 12 32 | 2 15 | 4 03 | 6 06 | 8 18 | 10 25 | 12 26 | 2 25 | 4 29 |
| 11 | 26 | செவ் | 4 29 | 6 38 | 8 46 | 10 42 | 12 27 | 2 10 | 3 58 | 6 01 | 8 13 | 10 20 | 12 21 | 2 20 | 4 24 |
| 12 | 27 | புதன் | 4 24 | 6 34 | 8 42 | 10 38 | 12 23 | 2 06 | 3 54 | 5 58 | 8 09 | 10 16 | 12 17 | 2 19 | 4 20 |
| 13 | 28 | வியா | 4 20 | 6 31 | 8 39 | 10 34 | 12 20 | 2 02 | 3 50 | 5 55 | 8 06 | 10 13 | 12 14 | 2 13 | 4 17 |
| 14 | 29 | வெள் | 4 17 | 6 26 | **8 34** | **10 28** | 12 15 | 1 56 | 3 46 | 5 49 | 8 02 | 10 69 | 12 09 | 2 08 | 4 12 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு நழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: கார் 29 உ. (14-12-84) காலை 9-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (8-34 —10-28) மகர லக்னம்

# கார்த்திகை மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

9உ (24-11-84) காலை 8-47க்கு தனு-புத

18உ (3-12-84) இரவு 11-46க்கு மகர-சுக்

28உ (13-12-84) பி·இ. 5-10க்கு விரு-புத

20உ புதன் வக்ராரம்பம்

24உ புதன் அஸ்தமனம்

12உ சனி உதயம்

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கார் | 1உ | (16-11-84) | பகல் | 11-42 | முதல் | சிங்கம் |
| | 3உ | (18-11-84) | ,, | 2-28 | ,, | கன்னி |
| | 5உ | (20-11-84) | பகல் | 3-40 | ,, | துலாம் |
| | 7உ | (22-11-84) | மாலை | 4-35 | ,, | விருச்சிகம் |
| | 9உ | (24-11-84) | மாலை | 6-50 | ,, | தனுசு |
| | 11உ | (26-11-84) | இரவு | 11-53 | ,, | மகரம் |
| | 14உ | (29-11-84) | காலை | 8-36 | ,, | கும்பம் |
| | 16உ | (1-12-84) | இரவு | 8-20 | ,, | மீனம் |
| | 19உ | (4-12-84) | காலை | 9-04 | ,, | மேடம் |
| | 21உ | (6-12-84) | இரவு | 8-36 | ,, | இடபம் |
| | 24உ | (9-12-84) | காலை | 5-40 | ,, | மிதுனம் |
| | 26உ | (11-12-84) | பகல் | 12-19 | ,, | கடகம் |
| | 28உ | (13-12-84) | மாலை | 5-09 | ,, | சிங்கம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி கார்த் மீ 29உ காலை 9-00 மணிக்கு மகர லக்னம் என அறிந்து கொண்ட பின் மகரம் என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

கார்த்திகை மாதப்பிறப்பு சிங்கராசியில் உதயமாகிறது. செவ்வாய் சனி சதுரஸ்ர (90°) திருஷ்டி பெறுவது நாட்டில் அமைதியின்மையையும், பல பாதிப்புக்களையும் காட்டுகிறது. நன்மழை பெய்து பயிர்கள் விருத்தியடையும். சமய வழிபாடுகள், வணக்கம், பிரார்த்தனை முதலியவற்றில் ஈடுபாடு கூடுதலாக இருக்கும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று.

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (கார்த்திகை மாதம் 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 08 நிமிஷம்)

| வாரம் | 6...08 7...08 | 7...08 8...08 | 8...08 9...08 | 9...08 10...08 | 10...08 11...08 | 11...08 12...08 | 12...08 1...08 | 1...08 2...08 | 2...08 3...08 | 3...08 4...08 | 4...08 5...08 | 5...08 6...08 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# பாரத மாதாவுக்கு அஞ்சலி

"ஸ்ருஷ்டி கர்த்ரீ பிரம்ம ரூபா கோப்த்ரீ கோவிந்த ரூபிணி
ஸம்காரிணீ ருத்ர ரூபா திரோதானகரீ ஸ்வரீ"

என்றெல்லாம் அன்னை பராசக்தியைப் போற்றுகின்றோம். அதே சக்தியாக பாரத மாதாவாக அவதரித்த

## இந்திரா அம்மையார்

அவர்களின் மறைவை எண்ணிக் கலங்கும் கோடிக்கணக்கான மக்களின் இதயங்களுக்கு யார்தான் ஆறுதல் கூற முடியும்!



சீரிய ஆற்றல் கொண்டு, சிறந்தவாம் பணிகள் செய்து, தேசத்திற்காக என்றும் பற்பல தியாகங்கள் புரிந்து உலகம் போற்றும் உத்தமியாய் வாழ்ந்து, சஞ்சலம் தோன்றும் சமயங்களில் சமாதானப் புறாவாய் பறந்து திரிந்து, ஈழத் தமிழரின் இன்னல் துடைக்கும் இனியதோர் தலைவியாக வாழ்ந்து, புக்ழுடம்புடன் திகழும் இந்திரா அம்மையாருக்கு சோதிடமலர் தனது இதய அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றது. ஆ—ர்

"என்பும் சதையுமாய் இத்தகையதோர் மாந்தர்
வாழ்ந்தார் என்பதை நம்பின்வருவோர் நம்பவும் மறுப்பர்"

யாழ். வானியற் கழகம்
167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெளியீடு இல.52

# கார்த்திகை மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

16-11-84 — 14-12-84

சூரியன்: 15-11-84 பி.இரவு மணி 1–22ல் விருச்சிகராசிப் பிரவேசம்
16-11-84 உதயம் காலை 6-08 அஸ்தமனம் மாலை 5-42
14-12-84 உதயம் காலை 6-20 அஸ்தமனம் மாலை 5-47

சந்திரன்: 16-11-84 அபர அஷ்டமி இரவு 11-37
22-11-84 அமவாசை பி. இரவு 4-28
24-11-84 சந்திரதர்சனம்
30-11-84 பூர்வ அஷ்டமி பி.இரவு 2-38
8-12-84 பூரணை பி.பகல் 4-24

## கிரகங்கள்

புதன்: மாத ஆரம்பத்தில் சூர்யாஸ்தமானத்தின் பின் மேற்குவானில் 19 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் 25-11-84ல் கூடிய தூரமாக 22 பாகை உயரத்திற் காணப்படும். பின் அதன் உயரம் குறையத்தொடங்கி 5-12-84ல் வக்கிரகதியடைந்து 8-12-84ல் மேற்கில் அஸ்தமனமாகும். 24-11-84ல் தனு ராசியிலும் பின் வக்கிரகதியில் 13-12-84ல் விருச்சிக ராசியிலும் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: மாதத் தொடக்கத்தில் அஸ்தமனத்தின் மேல் மேற்குவானில் மிகுந்த பிரபையுடன் 38 பாகை உயரத்திற் காட்சியளிக்கும் இக்கிரகம் மாதமுடிவில் 44 பாகை உயரத்திற்காணப்படும். 3-12-84ல் மகரராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாதத் தொடக்கத்தில் அஸ்தமனத்தின் மேல் மேற்குவானில் 67 பாகை உயரத்திற் காணப்படுமிக்கிரகம் மாதமுடிவில் 59பாகை உயரத்திற் காணப்படும். இம்மாதம் முழுவதும் மகர ராசியிலேயே சஞ்சரிக்கிறது.

வியாழன்: மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் பின் மேற்கு வானில் 49 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 25 பாகை உயரத்திற் காணப்படும். 26-11-84இல் தனு ராசியில் பூராடம் 3-ம் பாதத்திலும் 12-12-84ல் பூராடம் 4-ம் பாதத்திலும் பிரவேசிக்கிறது.

சனி: மாதஆரம்பத்தில் அஸ்தமனமாயிருக்கும் இக்கிரகம் 27-11-84ல் கிழக்கில் உதயமாகும். மாதமுடிவில் உதயம்முன் கீழ் வானத்தில் 29பா. உயரத்திற் காணப்படும். 24-11-84இல் துலா ராசியில் விசாகம் 3-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

இந்திரன் (Uranus) 3-12-84ல் விருச்சிக ராசியிற் கேட்டை 2-ம் பாதத்திற் பிரவேசிக்கும்.

வருணன் (Neptune) 30-11-84ல் தனு ராசியில் மூலம் 3-ம் பாதத்திற் பிரவேசிக்கும்.

குபேரன் (Pulto): 5-12-84ல் துலா ராசியில் சுவாதி 2-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

## சமாகமாதிகள்

22-11-84ல் பூரண சூரியகிரகணம். இது நியூசிலாந்து, நியூகினி, அவுஸ்திரேலியா, தென் பசுபிக் பிரதேசங்களில் தெரியும்.


24-11-84ல் முன்னிரவு சந்திரனுல் புதன் கிரகணமடையும். தென் அத்திலாந்திக், மத்திய தென் ஆபிரிக்கா,மடகஸ்காரிபகுதிகளில் தெரியும். அன்று சந்திர தர்சனத்தின்போது சந்திரனின் தென்கீழ் விளிம்புக்குச் சமீபமாகப் புதனை அவதானிக்கலாம்,

நள்ளிரவு சுக்கிரனுக்கு வடக்கு வியாழன் 2 பாகை. இதனையும் சந்திர தர்சனத்தின் பின் அவதானிக்கலாம்.

25-11-84 பின்னிரவு சுக்கிரனுக்கு வடக்கு வியாழன் 2 பாகை. முன்னிரவில் அவதானிக்க.

26-11-84 காலையில் சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன். 1½ பாகை. அன்று அஸ்தமனத்தின்பின் அவதானிக்கவும்.

27-11-84 நள்ளிரவு சந்திரனுக்கு வடக்கு செவ்வாய் 4 பாகை. முன்னிரவில் அவதானிக்க.




## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.
## 16-11-84 முதல் 15-12-84 வரை

**பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.**



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேட இராசியில் செனனமானவர்களுக்குச் சூரியபகவான் 8-ல் லோக மூர்த்தியாகி கேது இந்திரன் சேர்க்கை பெற்று மூர்த்தி பலமும், ஸ்தான பலமும் குறைந்து இந்த மாதம் சஞ்சாரம் செய்கின்றார். அத்துடன் 7-ல் சனியும் 10-ல் செவ்வாயும் கோசாரம் செய்வதும் இவர்களுக்கு தேகசுகம், குடும்பசுகக் குறைவுகளையே வலுவடையச் செய்யும். வரவுக்கு மிஞ்சிய செலவுகளைச் சமாளிக்க வேண்டியும் நேரும். நெருங்கிய உறவினர்களுக்குள் இழப்புக்கள் பிரச்சினைகளும் உண்டாகலாம். எவ்வாறாயினும் குரு 9-ல் வலிமையுடன் சுபகோசாரம் செய்தலின் அதிகம் பாதிப்புக்கள் ஏற்பட இடமில்லை.

குடும்பத்திலுள்ளவர்களுக்குக் குடும்ப சுகவீனம் பற்பல பிரச்சினைகள் அவ்வப்போது தோன்றி மறையும். புத்திரர் உதவிகள் அவ்வப்போது கிடைத்தாலும் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துக் கொண்டே போகும். குடும்பத்தில் அமைதி குன்றும்.

வர்த்தகர்களுக்கு புதன், சுக்கிரனின் சஞ்சாரம் சாதகமாக வின்மையால் முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. வியாபாரம் மந்தகதியில் நிகழுதலால் வருமானம் வீழ்ச்சியடையலாம். கறுப்புச்சந்தை வியாபாரம் தண்டனைகளுக்கும் ஏதுவாகலாம்.

உத்தியோகத்தர்களுக்குப் பற்பல புதுப்புதுப் பொறுப்புக்களுடன் கூடிய வேலைச்சுமைகளையும் சமாளிக்க வேண்டிய நிலை தோன்றக்கூடும். சக உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புக் குறையும். சிலருக்கு இடமாற்றம் போன்ற சம்பவங்கள் ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்குச் சனியின் உச்ச பலத்தால் நல்ல விளைச்சல் கிடைப்பினும் சந்தை வாய்ப்புக்

கள் குறைவதால் கஷ்டங்கள் ஏற்படும்; எதிர் பார்த்த லாபங்கள் குறைவுறும்;

தொழிலாளருக்குச் சம்பலன்களே தொடரும். தொழில் பிணக்குகளால் முதலாளிகள் தொழிலாளர் உறவில் பிரச்சினைகள் அதிகரிக்கும். முன்னெச்சரிக்கையுடன் செயற்பட்டால் பிரச்சினைகளைச் சமாளித்துக் கொள்ளலாம்.

மாணவர் கல்வியில் குழப்பநிலையே தொடரும். ஆசிரியர் - மாணவர் நல்லுறவுகள் குறைவு காணும். மாணவர் கல்வித் தேர்ச்சியும் குறைவுறுவதால் அதிக கவனம் எடுக்கவும்.

பெண்களுக்கு முக்கியமாகக் கன்னிப்பெண்களுக்கு எதிர்பாராத திடீர் திருப்பங்கள் ஏற்படுவதால் காதல் விவகாரங்கள் பேச்சளவிலேயே வளர்ந்து கொண்டு போகும்; எதற்கும் இவர்கள் முன்னெச்சரிக்கையாக இருத்தல் நன்று.

அதிஷ்ட நாட்கள்: நவ 16 பி.ப, 17, 18 மு. ப, 24 இரவு, 25, 26, 29 பகல், 30

துரதிஷ்ட நாட்கள்: நவ 18 பி.ப, 19, 20 பகல், 22 இரவு 23, 24 பகல், டிச 1 இரவு 2, 3.



## இடபம்

கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசிரிடம் 1,2-ம்கால்

இடபராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் 7-ல் தாம்பர மூர்த்தியாகிப் பலம் குறைந்து இந்திரன் கேதுவுடன் சேர்ந்து சஞ்சாரம் செய்வதும் குரு அட்டமத்தில் கோசாரம் செய்வதும் தேகசுகக்குறைவு, குடும்ப சுகக்குறைவு விபத்து - அவமிருத்துப்பயம், பொருள் நட்டம், இராசாங்க விரோதம், பிதாவழிப் பிணி பீடைகள், கடன் பயம் போன்ற சம்பவங்களே பெரும்பாலும் தொடரும்; சனி 6-ல் உச்சபலம் பெறுவதால் அதிகம் பாதிப்புக்கள் ஏற்படமாட்டாது. அந்நியர் உதவி போன்ற சுபபலன்களும் நிகழும்.

குடும்பத்தவர்களுக்குச் சம பலன்களே இம்மாதமும் தொடரும். எனினும் மாத முற்பகுதியில் சுக்கிரன் பலம் பெறுவதால் குடும்ப உறவுகள் சீராக இருக்கும். மாதப் பிற்பகுதியில் குடும்ப உறவுகளில் பாதிப்புக்கள் ஏற்படுவதுடன் குடும்பசுகக் குறைவு, புத்திரர் பிணி பீடைகள், வீண் விரையம் போன்றவை அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு புத சுக்கிரர்களின் ஸ்தான பலம் மாதத்தின் பெரும் பகுதியில் இருப்பினும் முதலீடுகள் செய்வதைத் தவிர்ப்பது விரும்பத்தக்கது. கறுப்புச் சந்தை வியாபாரம் பொருள் இழப்புக்களையும் ஏற்படுத்தி விடலாம்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிகாரிகளின் அவநம்பிக்கைக்காளாக வேண்டியும் நேரலாம்; கீழ் ஊழியர்களின் அவநம்பிக்கையையும் வெறுப்பையும் சமாளிக்கவேண்டி நேரும். சிலருக்குக் கஸ்டப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் முதலான வேதனை தரும் சம்பவங்களும் ஏற்படலாம்.

விவசாயிகளுக்கு இம்மாதம் விவசாயி உச்ச பலம் பெறுவதால் விளைவு அதிகரிக்கும். வருமானம் கூடும். விவசாயக் கடன் மானியம் முதலானவை உரிய காலங்களில் கிடைக்கும்;

தொழிலாளர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் அதிகரிக்கும். வருமானம் கூடும். எனினும் முதலாளிகளின் கெடுபிடிகளும் தொடரும். சிலருக்கு விபத்துக்கள் முதலானவற்றையும் எதிர் நோக்க வேண்டியும் வரலாம்.

மாணவர்கள் கல்வியூக்கம் கூடினும் கல்வித் தடைகளே பெரும்பாலும் தொடருவதால் பரீட்சைப் பெறுபேறுகள் பெரும்பாலும் திருப்தியளிக்காமலும் போகலாம்; விரக்தி மனப்பான்மையால் மாணவர்களுக்குச் சுயமுயற்சி குறைந்து காணப்படும்.

பெண்களுக்கு சிக்கலான காரியங்களே இந்த மாதம் முழுவதும் தொடரும்; காதல் விவகாரங்களில் தோல்விகள் அவமானங்களையும் எதிர் பார்க்க வேண்டியும் நேரிடலாம்; விவாகப் பேச்சுக்களில் முடிவுகள் தடை தாமதங்களுடன் நீண்டுகொண்டே செல்லும்.

அதிஷ்ட நாட்கள்: நவ 16 மு. ப, 18 பி. ப, 19, 20 பகல், 27, 28, 29 மு. ப, டிச 1 இரவு, 2, 3, 6 இரவு, 7 8,11 பி. பகல், 12, 13 பகல்

துரதிஷ்ட நாட்கள்: நவ 20 இரவு, 21, 22 பகல், 24 இரவு, 25, 26, டிச 4, 5, 6 பகல்.




மிருகசிரிடம் 3,4,திருவாதிரை; புனர்பூசம் 1,2,3,கால்

இந்த இராசியில் செனன மானவர்களுக்கு இந்தமாதம் சூரியன் 6ல் இரஜத மூர்த்தியாகி மூர்த்திபலமும் ஸ்தானபலமும் பெறுவது நன்மையாகும். சென்ற காலங்களிலும் பார்க்க இந்த மாதம் தேகசுகம், குடும்பசுகம் வருமானம் முதலானவற்றில் முன்னேற்றம்காணும். வியாச்சியம் முதலானவற்றில் சாதகமான முடிவுகள் ஏற்படும்; அரசாங்க உதவிகள் கிடைக்கும். புத்திரர் உதவிகள் கிடைக்கும். செவ்வாய் 8-லும் சனி 5-லும் கோசாரம் பலம் குறைவதால் சோரசத்துரு கருவி அக்கினி பயமும் விபத்துக்கள் முதலான பயங்களும் ஏற்படவும் கூடும்.

குடும்பத்தவர்களுக்கு டிசம்பர் 3 வரையும் சுக்கிரன் ஸ்தானபலம் குறைவதாலும் இவருக்கு 2ல் செவ்வாய் இருப்பதாலும் இக்காலம் தார புத்திரர் பிணி பீடைகளும் குடும்பப் பிணக்குகளும் தொடர்ந்தாலும் குடும்பநல்லுறவுகளில் அபிவிருத்தியும் காணும். வருமானம் அதிகரிக்கும். இனசனக் கொண்டாட்டங்களும் இடம் பெறலாம்.

வர்த்தகர்களுக்கு டிசம்பர் 3ன் மேல் முதலீடுகள் லாபமும், வங்கிகள் அரசாங்க உதவிகளும் கிடைக்கும்; செவ்வாய் சனி இவர்கள் பலம்குறைவதால் சோரசத்துரு அக்கினி பயமும் ஏற்படக் காரணமாகலாம்.

உத்தியோகத்தர்களுக்கு இந்தமாதம் சென்ற மாதங்களிலும் ஆறுதலும் முன்னேற்றங்களும் உண்டாகும். மேலதிகாரிகளின் பாராட்டுகளும் ஆதரவும் கிடைக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு கடன்வசதி அரசமானியம் முதலியன கிடைப்பினும் இயற்கை நியதிகளின் பாதிப்புகளால் விளைவுகுறையும். வாருமானமும் குறைந்து செலவும் அதிகரிக்கும். உற்பத்திகளுக்கு சந்தைப்படுத்துவதில் தரகர் குறுக்கீடுகளைத்தவிர்த்தலால் தப்பிக்கொள்ளலாம்.

தொழிலாளர்களுக்கு முதலாளிகளின் ஆதரவுகள் கிடைத்தாலும் சக தொழிலாளர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் பிணக்குகள் உண்டாகலாம். விபத்துக்களையும் அவமிருத்துக்களையும் சிலர் எதிர்நோக்க நேரிடலாம். தொழிலாளர் பிரச்சினைகளினால் வருமானக் குறைவும் ஏற்படலாம்.

மாணவர்களின் கல்வியூக்கமும் ஆசிரியர் மாணவர் நல்லுறவும் வளரும். சுய முயற்சியும் உடையவர்கள் பரீட்சைகளில் தேர்ச்சியும் பெறுவர்.

பெண்களுக்கு வாக்கு விரோதசம்பவங்கள் இடம் பெறுவதால் விவாக முயற்சிகளில் சிக்கல்கள் ஏற்படவும் கூடும். காதல் விவகாரங்கள் தோல்வியைத் தழுவ விடாமல் தப்புவிக்க நாவடக்கம் இவர்களுக்கு உதவும்.

அதிஷ்டநாட்கள்: நவ: 16 பி.ப, 17.18 மு.ப, 20இ. 21,22 பகல் 29பகல் 30. டிச: 1 பகல், 4,5.6. பகல், 9.10.11 மு.ப. 13 இரவு 14.

துரதிஷ்டநாட்கள்: நவ: 22 இரவு.23 24 பகல், 27,28,29 அதிகாலை. டிச: 6 இரவு. 7,8.




புனர்பூசம் 4ம் பாதம். பூசம்,ஆயிலியம்

கடகராசியில் செனனமானவர்களுக்கு சூரிய பகவான் இந்தமாதம் 5ல் சுவர்ணமூர்த்தியாகித் தானபலம் குறைந்து, மூர்த்திபலம் பெற்றாலும் குரு - செவ்வாய் - சனி - சுக்கிரன் முதலானவர்களும் தானபலம் குறைவதும் குடும்பசுகக் குறைவுகளும், வரவுக்கு மிஞ்சிய செலவுகளும், மனைவி மக்களால் சிரமங்களும், இராச விரோதங்களும், சமசுகமும் மன அமைதிக் குறைவும் உண்டாகலாம்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்ப உறவுகள் பாதிப்படைவதுடன் கவலைகள் பிணக்குகள் அதிகரிக்கும். குடும்பச் செலவுகள் கூடும். புத்திரர் உதவிகள் தடைப்படும். மனஅமைதி குறைந்து காணும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் மந்தநிலை தொடரும். நிதி நெருக்கடிகள் தொல்லைதரும்

முதலீடுகளைத் தவிர்த்தல் விரும்பத்தக்கது. கறுப்புச் சந்தை வியாபாரிகளுக்குப் பெரும் சோதனை காலமாகவும் அமையக்கூடும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு ஓரளவு கிடைக்கக் கூடும். சக்ஊழியர்கள் ஒத்துழைப்புக் குறைவுகாணும். வேலைப் பொறுப்புக்கள் அதிகரிப்பால் மன அமைதியின்மையும் ஏற்படக்கூடும்.

விவசாயிகளுக்கு அரசமானியம் முதலான நிதிவருவாய் குறைவுறுதலால் உற்பத்தி விளைவுகள் குறைவுறும். விளைவுகளை உரியகாலத்தில் சந்தைப்படுத்த முடியாமையால் நட்டமடைய நேரிடும். கூடியவரை கடன்களைத்தவிர்த்தலால் தப்பிக் கொள்ளலாம்.

தொழிலாளருக்குத் தொழில் பிணக்குகள் அதிகரிப்பதுடன் முதலாளிகளின் ஆதரவும் பேச்சளவிலேயே தொடரும். வேலை இழப்புகள் அல்லது வேலைப் பழுக்கள் அதிகரிக்கும். ஊதியக்குறைவால் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் கடன்பட நேரிடும். சிலருக்கு அவமிருத்து விபத்துக்களும் ஏற்படக்கூடும்.

மாணவர்களுக்கு எவ்வகையிலும் கடும் சோதனை காலமாகவே இந்த மாதம் அமையலாம். கல்விக்குழப்பங்கள் அடிக்கடி ஏற்படுதலால் படிப்பைத் தொடரமுடியாத சந்தர்ப்பங்களும் தொடரலாம். வேதனைகளும் ஏமாற்றங்களும் இவர்களுக்கு அதிகரிக்கும். சுயமுயற்சியுடையவர்கள் ஓரளவு தேர்ச்சிபெறுவர்.

பெண்களுக்கு, சுக்கிரன் குருரகோசரசஞ்சரத்தால் பெலமிழப்பதும் இவருக்கு 2ல் செவ்வாய் இருப்பதும் மர்மமான அல்லது விநோதமான பிணி பீடைகளையும், சத்திரசிகிச்சை சம்பவங்களையும் ஏற்படச் செய்தாலும் ஆச்சரியமில்லை. காதல் விவகாரங்களில் கட்டுப்பாட்டுடன் செயல்படுவதால் தப்பிக் கொள்ளலாம்.

அதிஷ்டநாள்கள்: நவ: 16 மு.ப, 18 பி.ப 19,20ப
22 இ 23, 24 பகல்
டிச: 1 இ, 2,3,6 இ 7, 8.

துரதிஷ்டநாட்கள்: நவ, 24 இ. 25, 26, 29 ப, 30
டிச: 1 ப. 9,10, 11, மு. ப.



# சிங்கம்

மகம், பூரம், உத்தரம் I-ம் கால்

இந்த மாதம் சிங்க ராசியில் ஜெனனமான வர்களுக்கு சூரியபகவான் லோக மூர்த்தியாகி ஸ்தானபலம் மூர்த்திபலம் குறைவதும், இவருடன் கேது, இந்திரன் சேர்க்கை பெறுவதும் தேகசுகக் குறைவு, குடும்பசுகக் குறைவு முதலானவற்றைக் கொடுக்குமாயினும், செவ்வாயும் சனியும் ஸ்தான பலத்துடன் உச்சபெலமும் பெறுவதாலும், குரு ஆட்சிவலிமையுடன் ஸ்தானபெலமும் பெறுவதாலும் எவ்வகைப் பிரச்சினைகளையும் சமாளித்து பொருள்வரவு, காரியசித்தி, விற்றல் வாங்கல் முதலான லாபங்கள், குடும்பத்தில் விவாகாதி சுப மங்கல நிகழ்ச்சிகள் இடம் பெறுதல் முதலான பலன்கள் நிகழும்.

குடும்பத்தில் நல்லுறவு வளரும். வாழ்க்கைத் தரம் உயரும். களத்திர-புத்திரர் உதவிகள் கிடைக்கும். டிசம்பர் 3-ன் மேல் குடும்பசுகக் குறைவுகளும் ஏற்படக்கூடும்.

வர்த்தகர்களுக்கு அரசாங்க,வங்கி நிதி உதவிகள் கிடைக்கும். புதன் ஸ்தான பெலமும் குறைந்துள்ளதால் வியாபார முன்னேற்றம் குறைவுறும். எதிர்பார்த்த லாபம் தடைப்படும். முதலீடுகள் விரும்பத்தக்கதல்ல.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் உதவிகள் குறைந்தாலும், சகஊழியர்கள்-பொது மக்கள் ஒத்துழைப்புக்கள் அதிகரிக்கும். வருமானம் அதிகரிக்கும். சிலருக்கு வசதியான இடமாற்றங்களும் கிடைக்கலாம்.

விவசாயிகளுக்குப் பயிர் விளைவும் வருமானமும் அதிகரிக்கும். அரசமான்னியம் - பசளை - விதை தானியம் முதலானவை உரிய காலங்களில் கிடைக்கும். சந்தைப்படுத்துதல் வசதியும், லாபமும் கிடைக்கும்.

தொழிலாளர் - முதனாளிகள் நல்லுறவு மென்மேலும் அபிவிருத்தி காணும். தொழில் வாய்ப்பும் - வருமானமும் அதிகரிக்கும். தொழில் பிணக்குகளில் சாதகமான முடிவுகள் மகிழ்ச்சி தரும்.

மாணவர்களுக்கு ஆசிரியர்களின் ஒத்துழைப்புக் கிடைப்பினும் கல்வி முன்னேற்றத்தில் குழப்ப நிலையே தொடரும். மாணவர்களின் கல்வித் தேர்ச்சி குன்றும். சுயமுயற்சியுடையவர்கள் கல்வித் தேர்ச்சி பெறலாம்.

பெண்களுக்கு விவாகாதி சுப சம்பவங்கள் எண்ணம்போல் நிறைவு காணும். காதல் விவகாரங்களில் வெற்றி பெறுவர். குடும்பத்திலுள்ளவர்களுக்கு மகிழ்ச்சியான காலமாக அமையும்.

அதிஷ்ட நாட்கள்: நவ 16 பி. ப, 17,18,20 இரவு 21, 22 பகல், 24 இரவு, 25, 26, டிச 4,5,6 பகல், 9, 10, 11 மு.ப, 13 இரவு, 14.

துரதிஷ்ட நாட்கள்: நவ 16 மு.ப, 27, 28, 29 கா, டிச 1 இரவு, 2, 3, 11 பி. ப, 12, 13 பகல்.



## கன்னி

உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1, 2-ம் கால்

கன்னியா இராசியில் செனனமானவர்களுக்கு சூரியபகவான் சுவர்ண மூர்த்தியாகி ஸ்தானபெலமும் மூர்த்தி பெலமும் பெற்றாலும், ஏழரைச்சனியின் கடைசிக் காலமும், குரு, செவ்வாயின் துர்க்கோசர சஞ்சாரமும் தொடருவதால் சமசுகமும், அரசாங்க உதவி, அலைச்சல், பிரயாணம்: தடை தாமதங்களின் மேல் காரியசித்தி, பொருள் வரவும் செலவு அதிகரித்தலும் முதலான பலன்களே நிகழும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பச் சிறப்பும் நல்லுறவும் விருத்தியடையும். வீட்டில் விவாகாதி மங்கல நிகழ்ச்சிகள் இடம்பெறும். குடும்ப வருமானத்துக்குச் செலவும் அதிகரிக்கும். புத்திரர் வழியில் துன்பங்களும் ஏற்படலாம்.

வர்த்தகர்களுக்கு நிதிநிலமை சீராக இருக்கும். வங்கிகள் - அரசாங்க உதவிகள் கிடைக்கும். முதலீடுகளில் எதிர்பார்த்த இலாபம் கிட்டாது. ஊழியர் விஷயங்களில் முன்னெச்சரிக்கை நல்லது. வீண் செலவுகளும் அதிகரிக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகள் - அரசாங்க ஆதரவுகள், ஒத்துழைப்புக்கள் கிடைக்கும். சக உத்தியோகத்தர்களுடன் கருத்து வேற்றுமை - மோதல்களும் ஏற்படலாம். வருமானம் கூடினும் எதிர்பாராத செலவுகளும் அதிகரிக்கும். சிலர் பதவியுயர்ச்சி முதலியனவும் பெறுவர்.

விவசாயிகளுக்கு விவசாய உற்பத்தி அபிவிருத்தியடையும். மானியம் - அரசாங்க கடனுதவிகள் உரிய காலங்களில் கிடைக்கும். விளைவுகளைச் சந்தைப்படுத்துவதில் சிரமங்கள் தோன்றும்.

தொழிலாளர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்தாலும் சக தொழிலாளர் ஒத்துழைப்புகள் குறைவுறும். தொழில் பிணக்குகள் வேலை நிறுத்தங்கள் போன்ற சம்பவங்களும் தொடரும். வருமானம் குறையும்.

மாணவர்களுக்குக் கல்வியில் குழப்பநிலையே தொடரும். ஆசிரியர் - மாணவர்களின் உறவுகளில் முன்னேற்றம் காணும், கல்வித் தேர்ச்சியில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றமில்லை.

பெண்களுக்கு - முக்கியமாகக் கன்னிப் பெண்களுக்கு விவாகாதி பிரச்சினைகள் தோன்றினாலும் சாதகமாக நிறைவுறும்; காதல் விவகாரங்களில் சிக்கல்கள் தோன்றக்கூடும். அழகுசாதன - ஆடம்பரப் பொருள் விருப்புகள் ஓரளவிற்கு நிறைவுறும். சிலர் அவமானச் சம்பவங்களுக்கும் ஆளாக வேண்டியும் வரலாம்.

அதிஷ்ட நாட்கள்: நவ 16 மு. ப, 18 பி.ப, 19, 20 பகல், 22 இரவு, 23, 24 ப, 27, 28, 29 அ.கா, டிச 6 இ, 7, 8, 11 பி.ப, 12, 13 பகல்

துரதிஷ்ட நாட்கள்: நவ 16 பி.ப, 17, 18 மு.ப, 30, டிச 1 பகல், 4,5, 6 பகல் 13 இரவு 14.



## துலாம்

சித்திரை 3ம் 4ம் சுவாதி, விசாகம் 1ம், 2ம், 3ம் கால்

துலாம் இராசியில் செனனமானவர்களுக்கு இந்தமாதம் சூரிய பகவான் 2ல் தாம்பர மூர்த்தியாகித் தானபெலம் மூர்த்திபெலம் இரண்டும் குறைவதுடன் கேது, இந்திரன் சேர்க்கைபெறுவ

தும், சென்மச்சனியும், 3ல் குருவும் 4ல் செவ்வாயுமாகிய துர்க்கோசரசஞ்சார காலமும் நிகழுதலின் சுபபலன்கள் அதிகம் தடைப்பட்டுத் தேகசுகக்குறைவு, பந்துசனதுன்பம், பொருள்நட்டம், இராசாங்ககோபம், குடும்பக்கஷ்டம், கருவி, விஷ, அக்கினி, சோர, சத்துருபயம், அகாலபோசனம், விபத்து, அவமிருத்துப்பயம், சிறைப்பயம் முதலான கஷ்டபலன்களே அதிகம் நிகழும். பக்திசிரத்தையுடன் தேவவழிபாடுகள் செய்து வருவதால் கஷ்டசாந்தி ஏற்படலாம்.

குடும்பத்தவர்களுக்குச் குடும்பசுகக் குறைவுகளும், புத்திரர் துன்பங்களும், அடிக்கடி ஏற்படும். வருமானம் குறைந்து செலவுகள் அதிகரிப்பதால் கடன்பழு ஏறிஏறிக்கொண்டே போகும். குடும்ப நல்லுறவுகளில் சீர் கேடுகள் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்த நிலைமையே தொடரும். நிதிநிலைமைகளில் சீர்கேடுகள் உண்டாகும். கறுப்புச்சந்தை வியாபாரம் பெரு நட்டத்தையும், தண்டனைகளையும் கொடுக்க ஏதுவாகியும் விடும். முதலீடுகளைக் கூடியவரை தவிர்த்தல் நன்மைதரும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் வெறுப்பும், தொல்லைகளும் தொடரும். வேலைப் பொறுப்புக்கள் அதிகரிப்பும், சகஊழியரின் ஒத்துழைப்பின்மையும் வேதனைகளைக் கொடுக்கும். கஷ்டப் பிரதேச இடமாற்றம், வேலைநீக்கம், அகாலபோசனம் போக்குவரவுக் கஷ்டம் முதலானவைகளும் நிகழலாம்.

விவசாயிகளுக்கு நிதிநிலைமைகளில் ஏமாற்றமான சம்பவங்களே இந்தமாதமும் தொடரும் பயிர் விளைவுகள், "கைக்கெட்டியது வாய்க்கெட்டாத" நிலைமையில் தரகர் முதலானவர்களால் சுரண்டப்படும். சிலருக்கு பயிரழிவுகள் ஏற்படவும் கூடும். நிதிக்கஷ்டமும் கடன்பயமும் தொடரும்.

தொழிலாளர்களுக்குச் சோதனையான காலமாக இந்தமாதம் அமையும். வேலையின்மை வேலைநீக்கம், தொழில் பிணக்குகள் முதலானவை தொடரும். முதலாளிகள் தொழிலாளர் உறவுகள் சீர்குலையும். வருமானக்குறைவும் கடன் பயமும் அதிகரிக்கும்.

மாணவர்களுக்கு கல்விக்குழப்பநிலையே தொடரும். ஆசிரியர் மாணவர் நல்லுறவுகள் பாதிப்புக்குள்ளாகும். மறதி, மனவெறுப்பு அக்கறையின்மை முதலியவற்றால் கல்வித் தேர்ச்சிகுன்றும்.

பெண்களுக்கு வேதனையான சம்பவங்கள் தொடரும். காதல் விவகாரங்கள் தோல்விகளையும் ஏமாற்றங்களையும் ஏற்படுத்தினாலும் ஆச்சரியமில்லை. தேகநலமும் குறையும்.

அதிஷ்டநாட்கள்; நவ 16 பி. ப. 17, 18, மு. ப. 20 இ. 21, 22, ப. 24 இ 25, 26, 29 ப. 30. டிச: 1 ப. 9,10,11 மு. ப. 13 இ. 14.

துரதிஷ்டநாட்கள். நவ: 18 பி. ப. 19, 20 ப. டிச: 1 இ. 2,3,6, இ. 7, 8.



## விருச்சிகம்

**விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை**

விருச்சிக இராசியில் சென்னமானவர்களுக்குச் சூரிய பகவான் இந்த மாதம் 1-ல் இரஜத மூர்த்தியாகி சமபலம் பெறுகின்றார்; ஏழரைச் சனியின் காலம் தொடரினும், மற்றைய பிரதான கிரகங்களான குரு-செவ்வாய்-சுக்கிரன் ஆகியவர்களின் கோசார சஞ்சாரம் பலம் பெறுகின்றார்கள். தேகசுகம் - குடும்ப சுகம் திருப்தி தரும். வருமானம் கூடினும் செலவும் அதிகரிக்கும். பெரியோர் உதவி, தொழில் விருத்தி, எதிர்பாராத செலவுகள், நீசர் தொல்லை போன்றவையும் நிகழும்.

குடும்பங்களில் நல்லுறவு விருத்தியடையும்; குடும்ப வருமானம் அதிகரிக்கும். பந்துசன - புத்திரர் உதவிகள் கிடைக்கும். வீட்டில் மங்கள நிகழ்ச்சிகள் முதலானவற்றாலும் செலவுகள் அதிகரிக்கும்; அந்நியர் தொல்லைகளும் ஏற்படலாம்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவுகளில் குறைவு காணும்; சக ஊழியர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்; வருமானம் கூடினும் செலவும் அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகள் லாபம் தரும்; நிதிநிலைகள் சீராக இருக்கும். கவனக் குறைவால் திடீர் நெருக்கடிகள், பொருள் நட்டம், இராச தண்டனை முதலானவைகளும் ஏற்படலாம்.

விவசாயிகளுக்குச் சம முன்னேற்றம் கிடைக்கும்; பயிர் அழிவுகள் தொடரினும் கடும் உழைப்பால் பயிர் விளைச்சலும் அதிகரிக்கும். உற்பத்திச்

செலவுகள் அதிகரித்தாலும் விளைச்சல் வருமானமும் அதிகரிப்பதால் நட்டம் ஏற்படாது.

தொழிலாளர்களுக்குத் தொழில் பிணக்குகள் தொழிலாளர் ஒத்துழைப்புக்கள் குறையும். சக தொழிலாளர் கருத்து வேற்றுமைகளால் சங்கடங்களுக்குள்ளாக வேண்டியும் நேரிடும். தொழில் இழப்புக்கள், வேலை வாய்ப்பின்மை, கடன் பயமும் ஏற்படலாம்.

மாணவர் கல்வியில் குறிப்பிடக்கூடிய மாற்றம் ஏற்படமாட்டாது. ஆசிரியர் - மாணவர் கல்வித் தேர்ச்சியும் திருப்தியளிக்க மாட்டாது.

பெண்களுக்கு மனநிறைவான சம்பவங்கள் இந்த மாதம் நிகழும், காதல் விவகாரங்கள் முதலானவை விவாகாதி சுப சந்தோஷங்களைக் கொடுக்குமாயினும், அந்நியர் தொடர்புகளால் அவமானப்பட வேண்டிய சந்தர்ப்பங்களும்; அநாவசியச் செலவுகளும் ஏற்படலாம். குடும்பத்தில் உள்ளவர்களுக்குக் குடும்பச் சச்சரவுகளுக்கும் ஏதுவாகலாம்.

அதிஷ்ட நாட்கள்; நவ 16 மு. ப, 18 பி. ப,19,20 22 இரவு, 23, 24 ப, 27, 28, 29 அதிகாலை, டிச 1 இரவு,2, 3, 11 பி.ப, 12, 13 பகல்.

துரதிஷ்ட நாட்கள்: நவ 20 இ, 21, 22 பகல், டிச 4, 5, 6 ப, 9,10,11 மு.ப.



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் I-ம் கால்

தனு இராசியில் ஜனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 12-ல் லோக மூர்த்தியாகிப் பலம் குறைகின்றார். சனியைத் தவிர மற்றைய பிரதான கிரகங்களின் கோசர சஞ்சார பெலமும் குறைந்தே காணப்படுகின்றது. தேகநலக்குறைவு ஜனசன துன்பம், பொருள் நட்டம், அரசாங்க அதிகாரிகளின் கோபம், விபத்து - அவமிருத்துப் பயம், கடன் பயம், அந்நியர் உதவி, அந்நியதேச பொருள் வரவு, தானப்பிரஷ்டம் முதலானவைகள் நிகழும்.

குடும்பத்தில் நேசபான்மை வளரும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பந்துமித்திரர்கள் உதவி செய்வார்போல் உபத்திரவம் செய்வர். புத்திரர் உதவிகள் சமயத்துக்குக் கிடையாது.

வர்த்தகர்களுக்குக் கணிசமான லாபம் கிடைக்கும். வியாபாரம் சுமாராக நடக்கும். எண்ணெய் - கொழுப்பு சம்பந்தமான பொருட்களின் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு அதிக இலாபம் கிடைக்கும், முதலீடுகளும் நன்மை தரும்,

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்புக் குறைவதுடன் வேலைப்பொறுப்புகளும் அதிகரிக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்புக்களிலும் குறைவு காணும். காரியாலயங்களில் மன அமைதிக் குறைவான சம்பவங்கள் பல நிகழ்ந்தாலும் ஆச்சரியமில்லை. இடமாற்றம், பதவியிறக்கம், வேலை நீக்க உத்தரவுகளும் சிலருக்குக் கிடைக்கலாம்.

விவசாயிகளுக்குச் சனி லாபத்தில் உச்ச வலிமை பெறுவதால் விளைச்சல் அதிகரிக்கும். அரச மானியம் - பசளை முதலியன கிடைக்கும். விளைவுகளைச் சந்தைப்படுத்துதலில் சிரமங்கள் குறையும். சிறப்பாகக் கருந்தானியங்கள் பலிதம் அதிகரிக்கும்

தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைத்தாலும் பிரச்சினைகளும் கூடிவரும். முதலாளிகளின் கெடுபிடிகள் அதிகரித்தாலும், தொழிலாளர்களின் ஒத்துழைப்புக்களால் எதையும் சமாளித்து விடுவார்கள். வாழ்க்கைத் தரமும் உயரும்.

மாணவர்களின் கல்வித் தேர்ச்சிகளில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் உண்டாகாது. ஆசிரியர் - மாணவர் ஒத்துழைப்பும் குறையும். மாணவர் மனதில் அதிருப்தியும், மறதியும், அமைதியின்மையும் காணும்.

பெண்களுக்குத் தேவைகளும், வசதிகளும் கூடிக்கொண்டே போகும். செலவுகளைச் சிக்கனப்படுத்துவதால் பிரச்சினைகள் வளரவிடாமல் தப்பிக் கொள்ளுவார்கள். கன்னிப் பெண்கள் காதல் விவகாரம் முதலியவற்றில் உணர்ச்சிவசப்படுதலால் ஏமாற்றப்படவும் கூடும்.

அதிஷ்ட நாட்கள்: நவ 16 பி. ப, 17, 18 மு.ப, 20இ, 21, 22ப, 24இ, 25, 26, 29 ப, 30, டிச1 ப, 4, 5,6 ப, 13 இரவு, 14.

துரதிஷ்ட நாட்கள்: நவ 16 மு:ப, 22 இ, 23,24ப, டிச 6 இ, 7,8,11 பி:ப,12,13.



## மகரம்

உத்தராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1, 2.

மகர இராசியில் ஜெனனமானவர்களுக்குச் சூரியபகவான் 11-ல் தாம்பர மூர்த்தியாகி ஸ்தான பெலமும், மூர்த்தி பெலவீனமும் பெறுவதால் சம பலன்களே நிகழ வேண்டும். மேலும் குரு, சனி, செவ்வாய் ஆகிய மற்றைய கிரகங்களும் ஸ்தான பலம் குறைந்தே காணப்படுகின்றன. சமசுகம் - கடின உழைப்பிலும் வருமானக்குறைவு, குடும்பத்தொல்லை, இனசன விரோதம், அன்னிய தேச சஞ்சாரம், இராசாங்க உதவி, சோரசத்துரு பயம் முதலானவைகளும் நிகழும்.

குடும்பத்திலுள்ளவர்களுக்கு இந்த மாதம் குடும்ப சுகம் திருப்தியளிக்கும். ஆடம்பர - அனுவசியச் செலவுகள் அதிகரிக்கும். புத்திரர்களால் கவலைப்பட நேரிடலாம். பெரியவர்களின் உதவிகளும் இடையிடையே கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை ஏற்படும். இலாபங்கள் மட்டுப்படுத்தப்பட்டுக் குறைவுறும். வங்கி - நிதி நிலைகள் கவலை தரும். முதலீடுகளைக் கூடியவரை தவிர்த்தல் விரும்பத்தக்கது.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு ஓரளவு இருப்பினும் சக ஊழியரின் ஒத்துழைப்புக் குறையும். இடமாற்றம், அகால போசனம் முதலியவற்றில் பாதிப்புக்குள்ளாக வேண்டியும் வரலாம்.

விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை முன்னேற்றம் காணும். முக்கியமாக எள்ளு, உழுந்து முதலான சிறுதானியங்களின் விளைவு அதிகரிக்கும். விளைவுகளைச் சந்தைப்படுத்துதலில் சிரமங்களும் நட்டமும் ஏற்படக்கூடும்.

தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்தாலும் முதலாளிகளின் ஒத்துழைப்புக் குறைவு காணும். தொழிலாளர்களுக்குள் கருத்து வேற்றுமைகளும் தொழிற்பிணக்குகளும் வலுவடையலாம். வருமானக் குறைவால் வாழ்க்கைத் தரமும் குறையும்.

மாணவர்களுக்குக் கல்விக் குழப்ப நிலைமையே தொடரினும், ஆசிரியர் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்கும். சுய முயற்சியாலும் மன உறுதியாலும் பரீட்சைகளில் தேர்ச்சியும் பெறலாம்.

பெண்களுக்கு அழகுசாதன - ஆடம்பரப் பொருட்களின் ஆசையால் மனவேதனைக்குரிய சம்பவங்களும் நிகழலாம். கன்னிப் பெண்களின் காதல் விவகாரங்களில் ஏமாற்றங்கள் ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை. பொதுவாக இவர்கள் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுவதால் தப்பித்துக் கொள்ளுவார்கள்.

அதிஷ்ட நாட்கள்: நவ 18 பி.ப, 19, 20 ப, 22இ, 23, 24 ப, 27, 28, 29 காலை, டிச 1 இ, 2, 3, 6 இ, 7, 8.

துரதிஷ்ட நாட்கள்: 16 பி.ப, 17, 18 மு.ப, 24 இ, 25, 26, டிச 9, 10, 11 மு.ப, 13 இரவு, 14.



## கும்பம்

அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 123-ம் கால்

இந்தமாதம் கும்பராசியில் ஜனனமானவர்களுக்கு சூரியன் 10ல் சுவர்ண மூர்த்தியாகி தான பலம் மூர்த்திபலம் பெறுவது சிறப்பாகும். மேலும் குருபகவானும் 11ல் பலம் பெறுவதும் நன்மையாகும். தேகநலம் - குடும்பநலம் - காரிய வெற்றி - பொருள்வரவு - வாழ்க்கைச் சிறப்பு முதலான சுப பலன்களே அதிகம் நிகழும்.

குடும்பத்தவர்களுக்கு வாழ்க்கைத் தரம் உயரும். குடும்பங்களில் அமைதியும் நல்லுறவும் வளரும், வீட்டில் விவாகாதி சுபமங்கள நிகழ்ச்சிகள் நிகழும். புத்திரர் உதவிகளும் கிட்டும்.

வர்த்தகர்களுக்கு வர்த்தகரீதியில் வங்கி உதவிகள் கிடைக்கும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் திருப்திகரமாக அமைய வாய்ப்பானகாலம். வர்த்தகம் சுறுசுறுப்புடன் இயங்குவதால் லாபம் பெருகும். முதலீடுகள் செய்ய வாய்ப்பானகாலம்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகள் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும். சிலருக்கு பதவியுயர்ச்சி - வசதியான இடமாற்றம் போன்ற வசதிகளும் கிடைக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் மரியாதைகளும் கிட்டும்.

விவசாயிகளுக்கு அரச மானியம் பசளை முத லிய சலுகைகள் கிடைக்கும். இயற்கையழிவுக ளால் பயிர் உற்பத்தி விளைவுகள் பாதிப்படைந் தாலும் நட்டம் வரமாட்டாது, விளைவுகளுக்கு நல்ல சந்தை வாய்ப்புக்கள் கிடைக்கும்.

தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதி கரிக்கும். தொழிலாளர் - முதலாளிகள் நல்லுறவு விருத்தியடையும். வருமானம் கூடுதலால் வாழ்க் கைத் தரமும் உயரும். இயந்திர, போக்குவரத் துச் சாதனத் தொழிலாளர்களுக்கு அவமிருத்து, விபத்துக்கள் ஏற்படலாம்.

மாணவர்களின் கல்வியூக்கம் அதிகரிக்கும். ஆசிரியர்கள் — மாணவர்கள் ஒத்துழைப்பு வளரும். பரீட்சைகளில் சித்தி பெற வாய்ப்பான காலம்.

பெண்களுக்குப் பெரியவர்களின் ஆசியும் அநு தாபங்களும் கிடைக்கும். முக்கியமாகக் குடும்பப் பெண்களுக்கும் உத்தியோகத்திலுள்ள பெண்களுக் கும் மனமகிழ்ச்சி பெருக வாய்ப்பானகாலம். கன் னிப் பெண்களுக்கு காதல் விவகாரங்கள் முதலியன மனநிறைவை உண்டுபண்ணும்.

அதிஷ்டநாள்கள்: நவ: 20 இ 21,22 ப.
24 இ. 25, 26 29 ப. 30.
டிச: 1 ப. 4,5,6 ப.9,10, 11மு.

துரதிஷ்டநாள்கள்: நவ: 16 மு. 18 பி. ப.
19, 20ப, 27, 28, 29அ. கா.
டிச 11 பி. ப. 12, 13 ப.




பூரட்டாதி 4ம் கால், உத்தரட்டாதி, ரேவதி,

மீன இராசியில் சென்னமானவர்களுக்குச் சூரி ய பகவான் 9ல் இரஜதமூர்த்தியாகி, மூர்த்திபல முடன் தானபலம் குறைந்தும் சஞ்சாரம் செய்கின் றார். செவ்வாய் 11ல் தானபலமும் உச்சபெலமும் பெறுகிறார். ஆனால் சனிபகவான் அட்டமத்திலும், குருபகவான் 10லும் சஞ்சாரம் செய்வதால் பலம் குறைவையே குறிப்பிடுகின்றனர். பொதுவாக இவர்களுக்கு இந்தமாதம் பெரியவர்கள் உதவியும், பொருள் வருமானமும், தடைதாமதங்களின் மேல் காரிய சித்தியும், சம்சுகமும், அலைச்சலும் அநா வசியமான செலவுகளும், விபத்துக்கள், அவமிருத் துக்களுக்குள்ளாக வேண்டியும் நேரிடலாம்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பாதிபன் 11ல் உச் சம் பெறுதலின் குடும்ப உறவுகள் சீராக இருக் கும். ஆனால் குடும்பத்தில் சுகக்குறைவுகளும் துக்க சம்பவங்களும் இடம்பெறவும் கூடும். கடன் பழுக்கள் குறைந்து வருமானம் அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு வர்த்தகரீதியில் புதன் சுக் கிரன் சாரங்கள் சாதகமாக இருப்பினும் முதலீடு கள் விரும்பத்தக்கதல்ல. அழகுசாதனப் பொருட் கள் வியாபாரம் சிறப்படையும். கறுப்புச்சந்தை வியாபாரம் தண்டனைகளும் பெற வழிவகுக்கும். அவதானம் தேவை.

உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வுகளுக்குப் பதிலாக பதவியிறக்கம் கிடைத்தாலும் ஆச்சரிய மில்லை. மேலதிகாரிகளின் நன்மதிப்போ அல்லது சகஊழியர்களின் ஒத்துழைப்போ கிடைப்பது பகீரதப் பிரயத்தன மாகிவிடும்,

விவசாயிகளுக்கு சனி அட்டமத்தில் சஞ்சரித் தலின் பயிரழிவுகளே அதிகரிக்கும். அரசமானியம் பசளை முதலியன கிடைப்பதில் தடைதாமதங் கள் ஏற்படும். விற்றல் - வாங்கல் விஷயங்கள் பலன் கொடுக்கும்.

தொழிலாளர்கள் வேலைவாய்ப்புக்கள் குறைவு காணும். தொழில் பிணக்குகள், முதலாளிகளின் கெடுபிடிகள் தொல்லைதரும். வருமானம் குறைத லால் மன அமைதிக்குறைவு காணும்.

மாணவர்களின் மனதில் வெறுப்பும் விரக்தி மனப்பான்மையும் தொடருதலால் கல்வித்தேர்ச்சி குன்றும். ஆசிரியர் மாணவர் உறவுகளும் பாதிப் படையும்.

பெண்களுக்கு விவாக விஷயங்களில் முன் னேற்றங்கள் தடைப்பட்டுக் கவலைப்பட நேரும். குடும்பப் பெண்களுக்கு குடும்பப் பிரச்சினைகள் குறையும். கர்ப்பிணிகள் சத்திர சிகிச்சைக்காளாக வேண்டியும் வரலாம்.

அதிஷ்டநாள்கள்; நவ: 16 மு.ப. 22 இ.
23,24 ப. 27,28,29 அ. கா.
டிச: 1 இ. 2,3,6 இ.
7, 8, 11 பி.ப 12, 13 ப.

துரதிஷ்டநாள்கள். நவ: 16 பி.ப. 17, 18 மு.ப.
20 இ. 21, 22 ப. 29 ப. 30
டிச: 1 ப. 13 இ. 14.

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(எண் - 6 தொடர்ச்சி)

**(ஈ) பிறப்பு எண்ணும் கூட்டு எண்களும் உடைய பலன்கள்**

**6—1** உயர்கல்விச் சிறப்பு, அரசாங்கப்பகுதி, அரசியல் என்பவற்றில் தொடர்பிருக்கும். இவர்களது குடும்பவாழ்வு நிறைந்திருக்கும். சிலருக்கு திருமணத் தாமதங்கள் ஏற்பட இடமுண்டு. இவர்கள் 6-ம் எண்ணில் பெயரை மாற்றினால் நற்பலன்கள் பெருகும்.

**6—2** காதல்வசப்படுவார்கள், எதிர்ப்பாலாருடன் தொடர்பிருக்கும். சங்கீதம், ஹோட்டல் தொடர்பான தொழில் என்பவற்றில் அதிக இலாபம் அடைவார்கள். காலை 6 மணிக்கு முன்பும், இரவிலும் பிறந்தவர்கள் 6-ம் எண்ணில் பெயரை அமைக்கவும். 24, 42-இல் பெயர் எண்ணை அமைக்கலாம்.

**6—3** அரசாங்கப்பகுதித் தொழில், ஆசிரியத் தொழில், குருத்தொழில், அச்சுயந்திரத் தொழில் என்பவற்றில் அதிக சிறப்படையலாம். வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட இடமுண்டு. கருத்து வேற்றுமையான குடும்ப அமைவு, அமைதியற்ற நிலை உருவாகும். பகலில் பிறந்தால் 3-ம் எண்ணிலும் அதாவது 21, 30, 33 எண்ணிலும் இரவு அல்லது அதிகாலை பிறந்திருந்தால் 6-ம் எண்ணிலும் அதாவது 24, 42, 51, 60 இலும் பெயர் எண்ணை அமைக்கவும். இவர்கள் ஜனனக் குறிப்பில் நடக்கும் திசையை அனுசரித்துப் பெயரை அமைத்துக் கொள்வதுதான் நல்லது.

**6—4** வாக்குவன்மை மிக்கவர்கள். சட்டம், பத்திரிகை, எழுத்து ஆகிய துறைகளில் அதிக புகழடைவார். சுகபோகங்களை அதிகமாக அனுபவிக்கத் துடிப்பார்கள். 6-ம் எண்ணில் பெயரை அமைக்கலாம். 24, 42, எண்களில் அதிக நன்மை தரும். காதல் திருமணம் நல்ல குடும்பவாழ்வாகும். அடிக்கடி ஏற்படும் சந்தேகத் தன்மை சில வீண் பிரச்சினைகளை உருவாக்கி விடும்.

**6—5** எழுத்துத்துறை, வியாபாரம், சமூகத் தொடர்பு, கமிஷன் வியாபாரம், வெளிநாட்டுத் தொடர்பான தொழில் போன்றவற்றில் அதிக பொருளைத் தேடலாம். அடிக்கடி தாவும் மனத்தை உடைய இவர்கள் காதலிப்பதைப் பொழுது போக்காகக் கொள்வார்கள். பெயர் எண்ணை 15, 23, 31, 42, 51 அல்லது 60ல் மாற்றிக் கொள்ளவும். மாற்றும்பொழுது திசாநாதனைக் (ஜனனக் குறிப்பு) கவனிக்க வேண்டும்.

**6—6** அரசாங்கத் தொடர்பு, இரசாயனம், அழகுப் பொருட்கள்; விற்பனை, நீர் வியாபாரம், ஹோட்டல் வியாபாரம் என்பன பொருத்தமான தொழிலாகும். முக்கியமாக இவர்களின் தொழில் மனோநிலையைப் பாதிக்கும். வியாபாரம் செய்தால் நடக்கும் திசையை (ஜனனக் குறிப்பில்) அனுசரித்து 5-ம் எண்ணில் பெயரை மாற்றலாம். 6-ம் எண்ணில் பெயரை மாற்றுவதற்கு ஆராய்ச்சி செய்ய வேண்டும். இந்திரிய சக்திப் பெலவீனம்—விரயம் மேலும் மனோவியாதியை ஏற்படுத்தும். சிலர் மந்திர மாந்திரீக செயல்களால் அல்லது இரசாயனக் கலவைகளால் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு மனோவியாதிக்காரர்களாக நம் மத்தியில் இருக்கின்றார்கள். பெண்கள் சம்பந்தமான விசயங்களில் பெலவீனங்களும், சந்தேகங்களும் ஏற்பட்டு அமைதியற்ற வாழ்வை ஏற்படுத்திவிடும். எனவே ஜாக்கிரதையாக இருக்கவும்.

**6—7** சமயப்பற்று மிக்கவர்கள். சாத்திரங்களையும், முன்னோர்களின் சம்பிரதாயங்களையும் ஏற்றிப்போற்றுவர். எண்ணெய்வகை, பலசரக்கு சாய்ப்புச் சாமான்கள், சட்டத்துறை போன்றன தொடர்பான தொழில்கள் சிறப்பைத் தரும். 6-ம் எண்ணில் பெயரை மாற்றிக்கொள்ளவும். 24,42,60ல் பெயர் எண்ணை மாற்றிக்கொள்ளவும்.

6—8 இவர்கள் கூட்டு வியாபாரம் அல்லது அது சம்பந்தமான தொழிலில் சிறப்படைவர். குடும்ப வாழ்வில் மனைவியுடன் அடிக்கடி கருத்து வேற்றுமை ஏற்படும். இவர்கள் 6, 9-ம் எண்கள் ஒற்றை எண்களாக வரக்கூடிய எண்களில் பெயரினை அமைத்துக் கொள்ளவும்.

6—9 விவசாயம், வைத்தியம், வியாபாரம் என்பனவற்றில் சிறப்படையலாம். தொழில் நுட்பத்துறை சிறப்பைத் தரும். அரசாங்க உதவி கிடைக்கும். இவர்கள் திடீர், திடீரென உணர்ச்சி வசப் படுவதும் கோபப்படுவதும் உண்டு. படபடப்பு, அமைதியற்ற தன்மை ஒரு விசயத்தை பலருக்கும் சொல்லித் திரிதல் என்பவற்றை அவதானிக்கலாம். காதலால் பலவித துன்பங்களை அனுபவிப்பார்கள். இவர்கள் 5, 6, 9-ம் எண்களில் பெயரை மாற்றிச் சிறப்படையலாம்.

அதிஷ்டத் திகதிகள்: 6,15,24/5,14.23/9,18, 27 அதிஷ்டத்திகதிகளாகும். மேலும் 1,3,10,12, 19,21,28,30-ம் திகதிகளில் விதிவசப்பட்ட பலன் நடக்கும்.

அதிஷ்டவாரம்: வெள்ளி, புதன், செவ்வாய்க் கிழமைகளில் நற்கருமங்கள் செய்யலாம்.

அதிஷ்ட நிறம்: இளம்பச்சை, றோஸ், சிவப்பு நிறங்களாகும். உடுப்புக்களையும் இந்நிறங்களில் பாவிப்பதால் மன அமைதியும், இன்ப உணர்வுகளும் அதிகரித்து குடும்பம் எப்பொழுதும் கலகலப்பாக இருக்க உதவும்.

அதிஷ்ட இரத்தினம்: பச்சைக்கல், பவளம் இவற்றை அணிவதால் மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்வு, உறுதியான உடல்நிலை, செல்வச் செழிப்பு ஏற்படச் செய்யும்.

6-ம் திகதியில் பிறந்த சில பெரியவர்களின் பெயர்களும் திகதிகளும்

| | | |
|---|---|---|
| ரோனல்டு றீகன் | 6-2-1911 | 6—2 |
| காமராஜ் | 15-7-1903 | 6—8 |
| நெப்போலியன் போனபாட் | 15-8-1769 | 6—1 |
| அறிஞர் அண்ணாத்துரை | 15-9-1909 | 6—7 |
| எலிசபெத் மகாராணி | 24-2-1926 | 6—8 |
| கவிஞர் கண்ணதாசன் | 24-6-1927 | 6—4 |

## தனு லக்ன ஆணும் இடப லக்கினப் பெண்ணும் சேர்வதால் ஏற்படும் பலாபலன்கள்

வே. சின்னத்துரை - நல்லூர்

செல்வி இடபத்துக்கு திரு. தனுசு சினேகிதனென்ற முறையில் நல்லவராக இருக்கமுடியும். ஏனெனில் அவவுடைய ஆர்வங்களை அவர் விரிவாக்க முறையில் கற்பித்துவிடுவார். இதனால் அவள் எப்பக்கத்தும் இசையக்கூடியவளாவாள். இருவரும் ஒருவரை ஒருவர் காதலிக்கத் தொடங்கிய பின்தான் உண்மையான தொந்தரவு ஆரம்பமாகும். உணர்ச்சிவசத் தொடர்புகளில் இடபம் 'மாற்றம்' என்பதை மறைத்து வைத்திருக்கும். நீண்டகாலத்திற்கு அன்பை வைத்திருக்க தனுவிற்கு கஷ்டமாகவிருக்கும், தனு ஒரு விளையாட்டு வல்லவன். துணிகரமாகச் செயல்களைச் செய்யத் தேடித்திரிவான். ஆகையால் வெளிக்களம் செல்ல நேரும். ஆனல் இடபம் உள்வீட்டிலேயே அடைந்திருப்பது அவனுடன் வெளிக்களம் செல்ல மறுக்கும். ஆகையால் வெளிக்களம் செல்ல விரும்பும் ஒருத்தியை அவன் தேடிக் கண்டுபிடிப்பான். அவளுடைய இயற்கையான குடும்ப சாமர்த்தியங்களை இவன் திரும்பியும் பார்க்கமாட்டான். அவளை அவன் நோக்குவான். ஆனல் தன்னை ஆறுதலடைய அவள் செய்யும் திறமையை அவன் கவனிக்கமாட்டான். அவருடைய விமரிசனங்களையும் கிண்டல்களையும் அவன் செவிமடுப்பான், சகிப்பான். அவனைக் கொஞ்சமாவது அவள் மாறுதலடையச் செய்வாள். ஆனல் அவனை அவள் பழக்கியெடுக்க முடியாது, அவன் உண்மையாக அவளைக் காதலித்தால் அவனுடைய அடங்காத்தனத்தை அவள் சகிக்கவேண்டும். அவனுடைய திட நம்பிக்கை அவனுக்கு நன்மை பயக்கும்.

பாலியலில் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு மாறும் தன்மை அவளுக்கு இருக்கவேண்டும். அடிக்கடி அவனுடன் படுக்கையிலும் வெளியிலும் சேர்தல் கூடுதலான முயற்சியாகும், மற்றவர்களைப் போலல்லாது தன்னுடைய மனம்போன போக்கிற்கெல்லாம் செயல்படுதல் இவ்வைதீகப் பெண்ணை பயங்கரத்துள்ளாக்கும். தன் மனம் போன போக்கிற்கு செல்ல அவளை அவன் பங்கெடுக்க கேட்டுக்கொள்ளும் முதற் தரத்திலேயே அவளுடைய அன்பை அவன் சாகடித்துவிடுவான்.

இது நல்ல ஒரு நட்பல்லாது அதற்கு மேல் ஒன்றுக்கும் இடமில்லை.

# ஆய்வுமன்றம்

தே: தயாரூபி
நம். 77 முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை.

ஏழரைச் சனியும் 3ல் குருவும் சம்பந்தப்பட்ட குருரகோசாரசஞ்சார காலம் நிகழ்கின்றது. அவர்கள் உங்களை மறக்கவில்லை. காலம்வர எல்லாம் நன்மையாக நிகழும்.

சு. வசிகரன், சங்கத்தானை, சாவகச்சேரி.

வெளிநாடுசெல்லச் சந்தர்ப்பம் கிடைக்கலாம். ஆனுல் அங்குபோனதில் பலன் கிடைக்குமா என்பது தான் கேள்விக்குறியாக இருக்கிறது.

ப. ஜெயவேல்,
158/1 ஸ்ரீகதிரேசன் தெரு, கொழும்பு 13.

உம்து சாதகப்படி நடப்புக்காலமும் நல்லது தான். எதற்கும் தெய்வ அருளும் சுயமுயற்சியும் வேண்டுமே!

எஸ். எஸ். மூர்த்தி, 4/4 பேலிலீத், நாவலப்பிட்டி,

விண்ணப்பப் படிவத்தில் கிரகநிலையும் குறிப்பிட்டு இருந்தால் தானே பலனும் கூறமுடியும்.

திருமதி: இ. தவராசா,
செட்டித்தெரு, பருத்தித்துறை.

உள்நாட்டிலும் பார்க்க வெளியிடத்தில், அதாவது சொந்த ஊருக்கு வெளியில் தொழில் புரியும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.

பசுபதி. இரவீந்திரன்,
தபாற்கந்தோர் அருகாமை, தெல்லிப்பழை.

ஏழரைச் சனியின் காலம் நீங்கினுலும் சகட யோகமுடைய சாதகமாதலால் சுகமும் துக்கமும் மாறிமாறி நிகழும்தானே.

தம்பையா. குந்தவி, ''கலையகம்'' சித்தன்கேணி.

தெய்வ அருளும் கைகூடி வருமாயின் பெரும்பாலும் நடப்பு குருதசை புதன் புத்தியில் விவாகம் நிகழவும் கூடும்.

எஸ். என். மனேகரன், திருநெல்வேலி கிழக்கு,

பெயர் மாற்றமும் நீலக்கல் அணிவதாலும் தீமையில்லை. ஆனுல் சோதிடர்களிலும், சோதிடத்திலும் உள்ள நம்பிக்கையால் தான் பலன்களையும் சரியாக உணரமுடியும்.

V. பரமேஸ்வரி, முன்னேஸ்வரம், சிலாபம்.

ஆங்கிலத் திகதி ஒவ்வொருநாளும் நள்ளிரவு 12-00 மணிக்கு மாறும். ஆதலால் 1960-5-14 அதி காலை 12-05 a.m க்குச் சரியான தமிழ்த்திகதி சார்வரி ஆ சித்திரை மீ 31ந் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12-05 மணியாகும். நீர்குறிப்பிட்டபடி ஷெ வருடம் வைகாசிமீ 1ம் திகதி சனிக்கிழமையாயின் குறித்த நேரத்துக்குச் சரியான ஆங்கிலத் திகதி 1960-5-15 ஆகும். இரண்டு நாள்களிலும் குறித்த நேரத்துக்குச் சாதக கிரகநிலைகளும் வித்தியாசப்படும். ஆதலால் சரியான திகதி நேரம் தெரியாமல் பலன் கூறமுடியாது தானே!

வ. சி. சிறீஸ்கந்தராசா,
ஆத்தியடி, புலோலி மேற்கு,

அட்டமத்துச் சனியும் 10ல் குருவுமாகக் கோசாரம் நிகழுதலின் எங்கு சென்றுலும் நீர்குறிப்பிட்ட காலத்தில் மனநிறைவு பெறுவதற்குத் தெய்வதுணையே அதிகம் வேண்டும்.

வ. சி. பாலநாதன்,
''சிவபதி'' சங்கத்தானை, சாவகச்சேரி.

முயன்ருல் கணித - விஞ்ஞானம் முதலான எந்தத் துறையிலும் உயர் கல்வியைத் தொடர வாய்ப்புக்களுக்கு அதிகம் சார்பான சாதகம்.

செல்வி. செ. சிவயோகி,
136/21 புளூமென்டால் வீதி, கொழும்பு 13.

''காதல் திருமணம், கலப்புத் திருமணம், கந்தருவ விவாகம் ஆகிய திருமணங்களுக்கும்...... எவ்வித பொருத்தமும் பார்க்க வேண்டாம்'' என்று சோதிடசாத்திரம் வலியுறுத்திக் கூறியுள்ளது. இவைகளல்லாத மற்றைய திருமணங்களுக்குத்தான் பொருத்தம் பலிக்கும் படியும் சோதிடசாத்திரம் கூறுகின்றது. எனவே ''ஒட்டும் இரு உள்ளங்களை வெட்டிவிடு'' வதற்குச் சோதிடசாத்திரத்தைக் கருவியாக்குவது ஏனே தெரியவில்லை!

க. சி. லோகரத்தினம்,
50, புதிய அத்தியடி, யாழ்ப்பாணம்.

இராகு திசையில் இப்பொழுதுள்ள நிலைமை நீடிக்காமல் மாற்றம் அடையலாம்.

சி. சிவமோகன், தாவடி தெற்கு, தாவடி.

உமது செனனநேரம் 1950-4-6 இரவு மணி 3-42 a.m ஆக இருப்பின் அப்போது நட்சத்திரம் அனுஷமாக இருக்கும். கிரகநிலையிலும் செவ்வாய் 8ல் அதாவது கன்னியில் இருக்க வேண்டும். சாதகம் சரியாகச் கணிக்கப் படாமல் பலன் சரியாக சொல்ல முடியாதே!

# உள்ளத்தைக் காட்டும் உள்ளங்கை

V. S. கந்தசாமி, தாளையடி.

ஒருவரது உள்ளங்கையின் நிறம், ரேகைகளின் நிறம் ஆகியவைகளைக் கொண்டே சில விஷயங்களை அறியலாம்.

உள்ளங்கை மிகவும் சிவப்பாக இருந்தால் அவர் ஓடியாடி வேலை செய்வதையே விரும்புவார். விளையாட்டுத் துறையில் வல்லவராய் விளங்குவார். இவருக்குச் சட்டென்று கோபம் வரும். கோபம் வந்தால் முரட்டுத்தனமாக நடந்து கொள்வார். எல்லோரும் தனக்குக் கீழே அடங்கி நடக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்; ஓரளவு பொரில்லாதவராகவும், வலிமையுடையவராகவும் இருப்பார். ஒரு சிலர் மாத்திரம் பக்கவாத நோய்க்கு ஆளாவார்கள்.

உள்ளங்கை சிறிது செந்நிறமாக இருக்குமானால் நல்ல ஆரோக்கியம், ஊக்கம், இரக்கம், தயாளகுணம் முதலிய பண்புடையவராகவும், தன்னைச் சூழ்ந்துள்ள எல்லோராலும் விரும்பப் படுபவராகவும், தான் எடுத்த காரியங்களில் பெரும்பாலும் வெற்றி அடைபவராகவும் இருப்பார்கள்.

உள்ளங்கை மஞ்சள் நிறமாக இருக்குமானால் அல்லது அதில் மஞ்சள் புள்ளிகள் இருந்தால் எதையும் சந்தேகக் கண்ணோடு பார்ப்பார். எதற்கெடுத்தாலும் எரிந்து விழுவார். உள்ளத்தில் உற்சாகம் இருக்கமாட்டா. பிறரைக் குறைகூறுவதில் இன்பம் காண்பார். காதல் துறையில் சிறிது ஒழுங்கற்ற இயல்பு உடையவராக இருப்பார்கள்.

உள்ளங்கை மிகவும் வெளுத்துக் காணப்படுமாயின் அவர் ஒரு முழுச் சோம்பேறியாகவும், எந்தக் காரியத்தையும் உடன் செய்யாது ஒத்திப் போட்டுக்கொண்டே போவார். அதனால் வறுமைக்கு ஆளாவார். இதை போக்கிக் கொள்ள வேண்டுமென்ற அக்கறையோ தீவிரமோ இவரிடமிராது. அன்பு, கருணை போன்ற உணர்ச்சிகளுக்கு இடமிராது. சுயநலக்காரர்களாக விளங்குவார்கள்.

உள்ளங்கை நீல நிறமாகவோ, சிறிது கறுப்பாகவோ இருக்குமானால் அவர்கள் போதைப் பொருள்களில் பிரியம் உள்ளவராய் ஒழுங்கான நடைமுறைகளை மேற்கொள்ளாமலே நடந்து வறுமைக்கு உள்ளாகி வருந்துவார்கள். இவர்கள் வாழ்க்கையில் மிகவும் நொந்து காணப்படுவர்.

அடுத்தபடியாக ரேகைகளின் நிறங்களை கவனிக்கவும். பொதுவாக உள்ளங்கையின் நிறம் ரேகைகளில் இன்னும் சிறிது அழுத்தமாகக் காணப்படும். வெப்பமான நாடுகளில் வாழும் மக்களின் ரேகைகள் பெரிதும் தேன் நிறமும், குளிரான நாடுகளில் வாழும் மக்களின் ரேகைகள் சிறிது கூடுதலான செந்நிறத்தோடு வியங்குவதும் நல்ல ரேகைகளின் அடையாளம். மற்ற நிறங்கள் நல்லவையாக இருந்தாலும் சில அம்சங்களில் தீயவையாக இருக்கும்.

ரேகைகளின் நிறம் மிகவும் மங்கலாக இருந்தால் அந்த மனிதரின் உள்ளமும் உடலும் பலவீனமான இருக்கும். பிறரை ஏமாற்றுவதற்கு உரிய வாய்ப்புக்கள் வந்தால் அவற்றை தயங்காமல் பயன்படுத்திக் கொள்வார்கள்.

ரேகைகளின் நிறம் மிகவும் கருமையாக இருந்தால் அந்த மனிதர் பெரிய உழைப்பாளியாக இருப்பார். எப்படி உழைத்தாலும் அவருடைய வாழ்க்கையில் பற்றுக்குறை இருந்து கொண்டே இருக்கும். அந்தப் பற்றுக்குறை நீக்கிச் செழிப்பு ஏற்பட தன் உள்ளத்தில் உள்ள சில அழுக்குகளை நீக்கிக்கொள்ள வேண்டும்.

ரேகைகளின் நிறம் மஞ்சளாக இருந்தால் அந்த மனிதர் சிறிது பொறுமைக்காரராக இருப்பார். அந்தப் பொறுமையே அவரை வீண் கவலைகளுக்கு ஆளாக்கும். இவற்றிலிருந்து விடுபட வேண்டுமானால் முதலில் தன் பொறுமையிலிருந்து தான் விடுபட வேண்டும். எதிலும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் அவர் கற்றுக் கொள்ள வேண்டும்.

ரேகைகளின் நிறம் மிகவும் சிவப்பாக இருந்தால் அந்த மனிதரின் உள்ளத்தில் மிருக உணர்ச்சி அல்லது உடலால் நுகரப்படும் இன்பங்களின் வேட்கை தலை தூக்கி நிற்கும். அதை அடக்கிக் கொள்ளாவிட்டால் சமூகத்தில் நன்மதிப்போடு வாழ முடியாது. வலிந்து அடக்கிக் கொண்டால் மனநோய்களுக்கு ஆளாக நேரலாம். ஆகையால் உணர்ச்சிகளை வலிந்து அடக்காமல், அவர் தன் விவேகமான சிந்தனைகளின் மூலம் உள்ளத்தைப் பண்படுத்திக் கொள்ள வேண்டும்.

வே. சின்னத்துரை ☞ # நான் செல்வந்தனுயிருப்பேனு?

சோதிடர்களிடம் வரும் மக்களின் நாவில் எழும் கேள்வி இதே. இவ்வினுவுக்கு சோதிடர்கள் பல உத்திகளைக் கையாண்டு விடை பகர்வார்கள். ஒரு சாரார் சொல்வார்கள் கஜகேசரி யோகம், லக்ஷ்மி யோகம், சந்திர மங்கள யோகம், ராஜயோகம் முதலிய யோகங்கள் இருக்குமாயின் செல்வந்தர்களென்று. நடைமுறையில் இந்த இந்த யோகங்கள் எல்லாம் செல்வத்தைக் கொடுப்பதில்லை. இப்படி யோகங்கள் அமைந்த எத்தனையோ பேர் வறுமையில் வாடுவதை யாம் கண்டிருக்கின்ருேம். ஒரு யோகமும் இல்லாதவர்களும் சிலர் செல்வந்தர்களாயிருக்கிருர்கள். சேஷாத்திரி ஐயரின் ஆராய்ச்சியின்படி லக்கினம் நிற்கும் நட்சத்திர அதிபதியும், யோகத்தான நட்சத்திர அதிபதியும் ஒரே கிரகமாயின் அச்சாதகர் தனவந்தராவார். கிருஷ்ணமூர்த்தி பத்ததியின்படி 2, 6, 10, 11-ல் நிற்கும் கிரகங்களின் நட்சத்திரத்தில் இருக்கும் கிரகங்கள் ஒருவனைசெல்வந்தனுக்கும்.

இவற்றில் பார்க்க சிறந்த யாம் அண்மையில் கண்டுபிடித்த முறையின்படி யோகத்தானமும், அதிஷ்டத்தானமும் ஒரே நட்சத்திரத்திலிருப்பின் அச்சாதகர் ஒரு கோடீஸ்வரர் என்றும் எவ்வளவுக்கெவ்வளவு இவ்விரு தானங்களும் அண்மித்திருக்கிறதோ அவ்வளவு செல்வந்தர் என்றும், இவ்விரு தானங்களும் தூரத்தே நின்ருலும் இரு நட்சத்திர அதிபதிகள் அண்மித்திருப்பின் அச்சாதகர் செல்வந்தராவார்.

## யோகத்தானத்தைக் (Yoga Point) கண்டு பிடிப்பதெப்படி?

இதை சேஷாத்திரி ஐயர் அவர்களே தமது New Technique of Prediction என்னும் புத்தகத்தில் காட்டியிருந்தார். சூரியனுடைய ஸ்புடத்தையும், சந்திரனுடைய ஸ்புடத்தையும் (புனர்பூச நட்சத்திர முடிபு அல்லது பூச நட்சத்திர தொடக்கமாகிய) 93 பாகை 20 கலையைக் கூட்ட வரும் ஸ்புடம் எந்த ராசியில் அமைகிறன்தோ அந்த இடத்து நட்சத்திரமே யோகத்தானமாகும்.

## அதிஷ்டத்தானம் காண்பதெப்படி? (Pars Fortuna)

சந்திர ஸ்புடத்திலிருந்து சூரிய ஸ்புடத்தைக் கழிக்க வருவது திதியாகும். இத் திதியுடன் லக்ன ஸ்புடத்தைக் கூட்ட வருவது அதிஷ்டத் தானமாகும். இத் தானம் எந்த இராசியில் எந்த நட்சத்திரத்தில் நிற்கிறதோ அதே இடம்தான் இத்தானமாகும்.

இனி சில உதாரணங்களைப் பார்ப்போம்:

| | | | |
|---|---|---|---|
| லக் 11-6-31 | | | |
| சூரி 3-5-1 | சாதகம் - 1 | | |
| | | | |
| | | யோ 12-35-50<br>அதிஷ் 12-32-10 | சந் 5-20-49 |

பிறப்பு: 17-2-1938 காலை 8-45 மணி,
பிறந்த இடம்: கொழும்பு

| யோகத்தானம் | | அதிஷ்டத்தானம் | |
|---|---|---|---|
| சூரியன் | 303-55-01 | சந்திரன் | 155-20-40 |
| சந்திரன் | 155-20-49 | + | 360 |
| பூசம் | 93-20 | | 515-20-40 |
| | 552-35-50 | – சூரியன் | 303-55-01 |
| | | | 211-25-39 |
| – | 360- | + லக்னம் | 341-06-31 |
| | 192-35-50 | | 552-32-10 |
| | | – | 360 |
| | | | 192-32-10 |
| | 6– 12-35-50 | | 6– 12-32-10 |
| துலாம் — சுவாதி 2 | | துலாம் — சுவா 2 | |

இரு தானங்களும் சுவாதி 2-ம் பாதத்திலிருந்தன. ஒரே ராசியில் நின்றன. இவர் இலங்கையில் அண்மையில் மறைந்த கோடீஸ்வரராவார்.

(24-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாடு முதலமைச்சரின் ஜாதக ஆய்வுக் கண்ணோட்டம்

மூ. சித்திரசேனன்,
திருகோணமலை.

| | | | |
|---|---|---|---|
| | குரு | | கே |
| லக் | கிரகநிலை | | சனி |
| சூரி செ,பு | | | |
| ரா சுக் | | சந் | |

| | | | |
|---|---|---|---|
| ல,பு கே | செ | வி | சுக் |
| சூ | நவாம்சம் | | |
| சந் | | | சனி |
| | | | ரா |

| | | | |
|---|---|---|---|
| ரா | ல சூரி | குரு சனி | பு |
| | அட்டாம்ச | | சந் செ |
| | | | |
| | | சுக் | கே |

பிறந்த திகதி: 17-1-1917
பிறந்த நேரம்: காலை 9-15
நட்சத்திரம்: சுவாதி 2-ம் பாதம்
ராகு தசையில் இருப்பு: 11 வரு. 0 மாத. 17 நாள்

காலயுக்தி வருஷ மார்கழி மாதச் சோதிட மலரில் வெளிவந்த தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜீ. இராமச்சந்திரனின் ஜெனனக் குறிப்பின்படி முதலமைச்சருக்கு 28-12-84 முடியும்வரை கேது மகாதசையில் குருபுத்தி நடைபெறுகின்றது. குரு இராசிச் சக்கரத்தில் 3-ம் இடத்தில் இருந்தாலும் பாவத்தில் 2-ம் இடத்தையடைகின்றார். இதனால் கும்ப இலக்கின காரருக்கு 2-ம் 11-ம் அதிபதியாகிய குரு எங்கு இருந்தாலும் பாபி என்று பிருஹத் ஜாதகம் கூறுகின்றது. 2-ம் வீடு, 7-ம் வீட்டுக்குரியவர்கள் ஜாதகருக்கு மரணம் ஏற்படுத்துபவர்கள். இதை பராசரர் சம்கிதை மட்டுமல்ல பலதீபிகை மற்றும் நூல்களும் சம்மதிக்கின்றன. எப்பொழுதெனில் 2-ம், 7-ம் வீட்டுக்குரியவர்களின் திசாபுத்தி காலங்களிலும் அந்தரங்களிலும்.

குரு நவாம்சாதிபனாகியும், நாவாம்சத்தில் கேது நின்ற வீட்டுக் கதிபனாகியும், மிருத்து காரகனாகின்றான். மிருத்து காரகர்களும் மாரகர்களைப் போலவே, மரணத்துக் கொப்பான நோய்களைக் கொடுப்பவர்கள். இவர்களைவிட 3-ம் 8-ம் இடக் கிரகங்களும், அவ்விடத்துக் கதிபர்களும் மாரகம் செய்பவர்கள். இந்நிலையில், 3-ம் இடத்ததிபரின் சித்திரம் தற்போது நடைபெறுகின்றது. இச்சித்திரம் 8-11-84-ல் முடிவுறுகின்றது. எனவே முதல்வருக்கு இரத்த அமுக்கத்தோடு சம்பந்தமான வாதமும், இருதய வருத்தமும் என்றே கூற வேண்டும். செவ்வாய் சிறுநீர்ப் பையில் கற்கள் உண்டாவதையும் குறிக்கும். இரத்த அமுக்கம், சிறுநீர்ப்பை வருத்தம் 8-11-84ல் குணமடைந்தாலும் அவர் வாதநோயால் பாதிப்படைவார் என்பதையும் கிரகநிலைகள் கூறுகின்றன. கும்ப லக்கினத்தவர்களை 2-ம் இடத்ததிபனாகிய குரு மாரகம் செய்யமாட்டான் என்று சந்திர காவியம் கூறுகின்றது. ஆனால் இது அனுபவ ரீதியில் ஒத்து வருவதாயில்லை. குரு கிரகசமயத்தில் கோபமிகொள்ளும் நிலையில் உள்ளார். குருபுத்தி இவருக்குக் கொடிதேயாகும். இதில் நான் முன் சொல்லிய ரோகங்களாகிய வாய்வு வாத, இருதய வருத்தத்தைக் குரு தப்பாது கொடுப்பார்.

அட்டாம்சம் ஆயுள் பலத்தைக் கூறுவது. அதிபன் செவ்வாய் கடகத்தில் சனி மங்கள யோகம் பெற்று இருக்கின்றார். "கொடியோர்கள் கேந்திரத்தில் கொடார் கொடிய பலன் நல்லோர் கொடுப்பர்" செவ்வாய் தனது சித்திரத்தில் மாரகம் செய்யான் என்பது தெளிவாகின்றது. அறுவைச் சிகிச்சை நடைபெற இடமுண்டென்பதை செவ்வாய் சித்திரம் காட்டுகின்றது. இச் சித்திரத்தின் பின் இராகு சித்திரம் நடைபெறும். இவர் இராசிச் சக்கரத்தில் 11லும் அட்டாம்சத்தில் 12ம் இடத்திலும் உள்ளார். இராகுவால் விஷநீர்ப் பீடையும் வெளியூர்ப் பிரயாணமும் ஆயுத பயமும் உண்டு என்பதைத் தெளிவாக்குகின்றது.

குருவின் பார்வை இராகுவிற்கு இருப்பதால் அறுவைச் சிகிச்சையினால் தீங்கில்லை.

இதே வேளையில் நாம் கோசாரத்தையும் நோக்க வேண்டும். சந்திர இலக்கினம் (நாம் இராசி என்று சொல்வது) உடல்நிலையைக் குறிப்பது. அதில் சனீஸ்வரன் குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சஞ்சரிக்கின்றார். இவ்விராசியில் சனீஸ்வரன் அஷ்டவர்க்கத்தில் 4 பிந்துக்களைப் பெற்றுள்ளார். இது ஜாதகரின் இரண்டாவது ஜன்ம ஏழரை: சனி உச்சனுயினும் ஜன்மத்தில் சஞ்சரிக்கும்பொழுது, ஆயுதபீடை, கட்டுப்படுதல், விஷபீடை, வாதபீடை, பிறரால் செய்யப்படும் அவமதிப்பு, பொருள் இழப்பு, அலைச்சல், நீதிமன்ற விசாரணை முதலிய கொடிய பலன்களை யவனேஸ்வரர் கூறுகின்றார். கொடிய பலன்களும் சம பலன்களாகவே காண்கின்றன. இராசிக்கு இரண்டில் கேது, 3-ல் சுக்கிரனின் நட்சத்திரமான பூராடத்தில் குரு, குருவின் அஷ்டவர்க்கத்தில் தனு இரண்டு பிந்துகளை மாத்திரம் பெற்றுள்ளது. குருவினால் எழுபத்தைந்து வீத துர்ப்பலன் நிகழ இடமுண்டு; குரு, அவமதிப்பு, கலங்கிய மனம், இஷ்ட மரணம், உறவினரால் உண்டாகும் தொல்லை முதலியவைகளைக் கொடுப்பான், திசா புத்தியும் கோசரமும் கொடிதானால் பலனும் கொடியது என்பது பொது விதி. 8-ல் இராகு சூரியனின் நட்சத்திரமான கார்த்திகையில் நீசம், எட்டில் இராகு சஞ்சரிக்கும்பொழுது மரணபயம், விஷபீடை, ஆயுத பயம் முதலிய துற்பலன்களைக் கூறுகின்றனர்.

ஆயுர் பாவத்தில், பலதீபிகை அத்தியாயம் பதின்மூன்று சுலோகம் பதினான்கில் சொல்லிய படி இலக்கினம் ஸ்திரமாகி, சந்திர இலக்கினம் (சரமானல்) ஜாதகன் மத்திம ஆயுளை அடைவான் என்று மந்திரேஸ்வரர் கூறுகின்றார். தொடர்ந்து வரப்போகும் சனி புத்தியும், புதன் புத்தியும் முதல்வருக்கு சுகம் கொடுப்பனவாகத் தோன்றவில்லை. அவர் வாத ரோகத்தால் அவஸ்தைப் படுவதையே காட்டுகின்றது. 4-2-87ல் ஆரம்பமாகும் சுக்கிர திசை சுகம் கொடுக்கவல்லது.

கர்ணனுடைய உடம்பானது அருச்சுனனின் அம்புகளால் சல்லடையாய்த் துளைக்கப்பட்ட நிலையிலும் கர்ணனின் ஆவியானது பிரியாமலிருப்பதற்குத் தர்மதேவதை உடந்தையாயிற்று. அவரவர் செய்கின்ற தர்மத்தின் பயனால் ஆயுள் நீடிக்க முடியும் என்பதைக் கர்ணனின் கதை தெளிவாக்குகின்றது: அற்ப, மத்திம, தீர்க்க ஆயுள் முறையே 32, 70, 100 ஆகின்றது; இங்கே முதல்வருக்கு மத்திம ஆயுளென்று அவரின் கிரகநிலைகள் உணர்த்துகின்றன. இவ் இக்கட்டான வேளையில் அவரின் ஆயுள் நீடிப்புக்குப் பூசைகள் புரிந்து பிரார்த்திப்போமாக!

சோதிடம் கற்றுணர்ந்த பெருமக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பது சாலச் சிறந்ததாகும்.

சுபம்.

---

நான் செல்வந்தனு... (22-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதகம் 2: பிறப்பு 12-12-1950 மாலை 6-07. இடம் நல்லூர். சந்திரன் 2-8-45 மகரம். சூரியன் 26-16-7 இலக்கினம் துலாம் 27-52-32. யோகத்தானம் தனு 1-44-52 அதிஷ்டத்தானம் தனு 3-45-5 இரு தானங்களும் மூலம் 4-ம் பாதம். இச்சாதகர் சவூதி அரேபியாவில் தொழில் செய்து கோடீஸ்வரராயிருக்கிறார்.

சாதகம் 3: பிறப்பு 31-7-1951 மாலை 6-07. இடம் கராச்சி. சந்திரன் மிதுனம் 17-45-33 சூரியன் கடகம் 14-24-40 இலக்கினம் தனு 26-33-18 யோகத்தானம் மகரம் 5-30-13 அதிஷ்டத்தானம் விருச்சிகம் 29-54-11.

நட்சத்திரம் உத்தராடம் - சூரியன்
நட்சத்திரம் கேட்டை - புதன்

இரு தானங்களும் அண்மித்திருக்கின்றன. இப்பெண் ஒரு கோடீஸ்வரரின் மனைவி.

சாதகம் 4; பிறப்பு 16-10-35 காலை 4-40. இடம் திருநெல்வேலி கிழக்கு. சந்திரன் இடபம் 14-21 சூரியன் கன்னி 28-42. லக்கினம் கன்னி 8-20.

யோகத்தானம் கும்பம் 16-23 சதயம் – ராகு
அதிர்ஷ்டத்தானம் மேடம் 23-59 பரணி-வெள்ளி
இரு தானங்களும் அண்மித்திருக்கின்றன.

இச்சாதகர் சவுதி அரேபியாவில் 3 வருடங்களாக கொன்சல்ரன் பொறியியலாளராக மாதம்75 ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றவர். இவர் அங்கேயே அகாலமரணமானார். இவருடைய தேட்டங்களெல்லாம் கனடாவில் வைப்பிட்டிருந்தது. இப்போ அவருடைய மனைவிமக்கள் அத்தேசத்திலேயே வாழ்கின்றனர்.

# அயனம்சம்

பூமிக்கு மத்தியில் உள்ள நில நடுக்கோடு (Equator) பூமத்தியரேகை எனப்படும். பூமியின் வட துருவத்திலிருந்தும் தென் துருவத்திலிருந்தும் சமதூரத்தில் மத்தியில் செல்லும் நிலநடுக்கோடு போல் (Equator) வானுலகிலுள்ள நடுக்கோட்டை நாம் ( Celestial (Equator) விண்ணுலக நடுக்கோடு என்று நாம் கூறுகின்றோம்.

பூமி நேராக நிமிர்ந்து நின்று சுழன்று செல்வதில்லை. நேர்நிலை (Vertical) யிலிருந்து 23 பாகை 27 கலையளவில் சரிந்து காணப்படுகிறது. இதனால் சூரியனின் பாதையும் சரிந்ததுபோல் காணப்படுகிறது. அது 23 பாகை 27 கலையளவில் சரிந்து இருக்கிறது.

குழந்தைகள் உருட்டி விளையாடும் துவிச்சக்கர வண்டியின் இரு வளையங்களை எடுத்து ஒன்றையொன்று குறுக்கே ஒட்டி இரு கைகளாலும் பிடியுங்கள். இப்போது எதைக் காண்பீர்கள்?

ஒரு வளையம் மற்ற வளையத்தை இரு இடங்களில் முட்டுகின்றது அல்லது வெட்டி நிற்கின்றது. இருவளையங்களும் முட்டும் இரு நிலைகளும் ஒன்றுக்கொன்று அருகில் நிற்கின்றனவா? அது எப்படியிருக்கும்? இரு நிலைகளும் சரி நேர் எதிரில் அல்லவா அமைகின்றன.

K. பொன்னையா — கரவெட்டி

இதுபோல் (ecliptic) கதிர்வீதி எனப்படும் சூரியனுடைய பாதை (Celestial equator) விண்ணுலக நடுக்கோட்டை இரு இடங்களில் அல்லது இரு நிலைகளில் குறுக்காக வெட்டுகின்றன. இவ்விரு நிலைகளும் ஒன்றுக்கொன்று 180 பாகை தூரத்தில் அமைந்திருக்கின்றன.

சூரியன் தக்ஷிணாயனத்தில் செல்லும்போது நில நடுக்கோட்டை ஒரு இடத்தில் குறுக்கிடுகின்றது. இதற்கு நேரெதிர்த் திசையில் சூரியன் நில நடுக்கோட்டை குறுக்கிடும் நிலையை இளவேனிற் பகலிராச் சமநாள்நிலை (Vernal equinox) எனவும் முந்திய நிலையை கூதிர்ப்பருவத்திற் பகலிராச் சமநாள் நிலை (Autumnal equinox) எனவும் குறிப்பிடுவார்கள்.

சூரியனுடன் ¸கிரகங்கள் செல்லும் பாதையை வான்மண்டலம் எனக் கருதிய இந்துக்கள் அது விண்ணுலக நடுக்கோட்டை (Celestial equator) சந்திப்பதை அறிந்தார்கள். அது, சூரியன் பூகோளத்தின் வடபகுதிக்குச் செல்லும்போது, கூதிர்ப் பருவத்தில் பகலிராச் சமநாள் நிலைக்கு 180 பா. எதிரில் அமைந்த இளவேனிற் பகலிராச் சமநாள் நிலையில் அமைகிறது.

அதாவது கூதிர்ப் பருவத்தில் பகலிராச் சமநாள் நிலையும் (Autumnal equinox) சித்திரை நட்சத்திரமும், இளவேனிற் பகலிராச் சமநாள் நிலையிலிருந்து (Vernal equinox) கவனிக்கும்போது ஒரே ரேகாம்சத்தில் உள்ளதாக எடுத்துக்கொண்டார்கள். ஒவ்வொரு வருடத்திலும் 12 நிலைகளில் சந்திரன் பூரணம் அடைவதால் இந்துக்கள் (ecliptic) சூரியனுடைய பாதையாகிய கதிர்வீதியைப் பன்னிரு (12) சம பாகங்களாக வகுத்துக் கொண்டார்கள். இதைக் கதிரவன் வீடு அல்லது ராசி என அழைப்பர்.

இத்துடன் ராசி மண்டலத்தை 27 சம பாகங்களாக வகுத்ததனால் ஒவ்வொரு பாகமும் 13பா. 20 கலை பிரமாணம் விரிந்திருக்கும். இதே பிரமாணமே ($13^\circ - 20'$) 24 மணித்தியாலயங்களுக்கு (ஒரு நாள்) சந்திரனின் சராசரி ஓட்டமாக அமைகின்றது.

இந்த 13 பாகை 20 கலை வளைவரையின் பாகத்தை (Arc) சந்திரன் வீடு (Lunar Mansion) நட்சத்திரம், சாரம் என்றெல்லாம் கூறப்படுகின்றன; எண்ணிக்கையில் 27 ஆக வகுத்த போதிலும், வட தென் பகுதிகளிலிருந்தாலும் அல்லது எந்த வளைவரையின் பாகத்திலிருந்தாலும், எல்லா நட்சத்திரங்களையும் 27 விதமான நட்சத்திரங்களாக வகுத்தார்கள்.

விண்ணுலக நடுக்கோடும் ராசி மண்டலமும் சந்திக்கும் இடத்தை (equinox) சூரியனின் நில நடுக்கோட்டினைக் கடந்து செல்லும் இரு நிலைகளாகக் கொண்டார்கள். இந்துக்களும் மேல்நாட்டவர்களும் இந்நிலை மிக மிக மெதுவாகப் பின்புறம் செல்வதை அறிந்தார்கள். இது 71 வருடங்களுக்கு 1 பாகை வீதம் சென்றுகொண்டிருக்கிறது. நூற்றாண்டுகளும் கழிந்து செல்ல, ராசி மண்டலத்தை விண்ணுலக நடுக்கோடு சந்திக்கும் நிலையும், இந்துக்கள் கண்டுபிடித்த நிரந்தர நிலை

(27-ம் பக்கம் பார்க்க)

# அன்னையைக் கண்டேன் - 30 "ஆனந்தபைரவி"

## அத்திராணைப் பதிமேவி அருளாட்சி செய்யும் அன்னை

ஊரெழு மீனாட்சி அம்பிகையிடமிருந்து நீண்ட நாட்களுக்கு முன்னரே எமக்கு அழைப்பு வந்து விட்டது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் அவளுக்குப் பாதசேவை செய்யும் வாய்ப்பும் கிட்டியது. கோலாகலமான மகோற்சவப் பெருவிழா வின்போது முதன் முதலாக அவளைச் சென்று தரிசித்து வழிபட்டுச் சேவையாற்றச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவ்வேளையில் அவளது அருட்சிறப் பையும் பெருமையையும் புகழையும் கண் குளிரக் காண முடிந்தது.

பின்னர் ஒருநாள் அமைதியான வேளையில் அங்கு சென்று அவளை வழிபட்டு, வரலாற்றுச் செய்திகளையும் சேகரித்தோம். ஆலய வாசலில் வெளி மண்டபமாகப் போடப்பட்டிருக்கும் சிறிய கொட்டகையில் நம்மை வரவேற்பது ஸ்ரீ சக்ர மேருப்ரஸ்தார வடிவில் அமைந்த சீமெந்து மேடை யாகும். கும்பாபிஷேக சத்தர்ப்பத்தில் அமைக் கப்பெற்ற இம்மேடையைத் தொடர்ந்து பாது காத்து வருவதோடு சங்காபிஷேகம் மூதலியவற் றிற்கான யாக வேதிகையாக இதனைப் பயன்படுத் துகிறார்கள். இக்கொட்டகையை மண்டபமாக்கும் திருப்பணி மிகவிரைவில் ஆரம்பமாகவிருக்கிறது.

கோபுர வாசலினூடு உள்ளே நுழைந்ததும் நந்தி, பலிபீடம், துவஜஸ்தம்பம் இவற்றோடு கூடிய ஸ்னபன மண்டபத்தில் நிற்கும்போது வலது புறம் அழகிய பெரிய ஸ்னபன மண்டப மும், யாகசாலை, பைரவர் சந்நிதானம் என்பன வும் இடதுபுறம் பாகசாலையும் தென்படுகின்றன.

விதானம் அமைக்கப்படாத திறந்த உள்வீதி யில் மெத்தென்ற பச்சைப்பட்டு மெத்தையாக ஒருவகைப் புல் வளர்க்கப்பட்டு அளவாக வெட்டி விடப்பட்டிருக்கிறது. இவ்விதம் வெட்டி விடுவ தற்கு ஏதுவாக அதற்கான இயந்திர வசதிகளும், நீர் பாய்ச்சுவதற்கு வசதியாக மின் மோட்டார், தொட்டி, குழாய் முதலியனவும் இருக்கின்றன.

இவை மட்டுமல்ல. உற்சவ காலங்களில் அம்பிகை எழுந்தருளி வந்து வீதிவலம் வருகின்ற போது அவளது ஆடையணிகலன்கள், அலங்கா ரங்களின் வசதிக்கும் குறைவில்லை. அவ்வேளை களில் மின்சார விளக்குகளின் வர்ண ஜாலங்களும் ஒளி வெள்ளமும் கண்ணகையாளின் புன்னகையை யும் பொன்னகையையும் வெளிச்சம் போட்டுக் காட்டும்போது அவள் பணக்காரிதான் என்பதை உணர முடிகின்றது.

அவள் அடியார்களுக்கும் இவ்விதமே அருளை யும் பொருளையும் அள்ளிவீசிக் கருணை புரிகிறாள். பெரிய பெரிய தொழில் நிறுவனங்களின் உரிமை யாளர்களும், வெளிநாடுகளில் தொழில் புரியும் இளைஞர்களும் அம்பிகையின் அருள் மழையில் நனைந்து கொண்டு இவளைப் பொருள் மழையில் குளிப்பாட்டுகிறார்கள்.

வீதியில் விநாயகர், சுப்ரம்மண்யர், சனீஸ் வரன், நவக்ரஹம், பைரவர், நாகதம்பிரான் இத்யாதி பரிவார தேவர்கள் சந்நிதானங்களில் அமர்ந்து அருள் வழங்குகிறார்கள்.

இவ்வாலயத்திலே கண்ணகை என வழங்கும் மீனாக்ஷி அம்பிகையின் வரலாறு 1922-ம் ஆண்டிலே தென்னோலைக் கொட்டிலில் ஆரம்பமாகிறது.

1926 இல் மடாலயமாக அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. பின்னர் பல புதிய திருப்பணிகளின் பின் 1961 இல் சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்களால் மஹா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

ஆவணி உத்தர நக்ஷத்திரம் முதல் 10 நாட் கள் அலங்கார உற்சவம் நடந்து வந்து பின்னர் 1964 இல் இருந்து பதினைந்து நாள் விழாவாக வளர்ந்தது. 1973 இல் ஐம்பதாண்டுப் பொன் விழா கொண்டாடப்பட்டது. பங்குனி உத்தர நாளில் திக்விஜயம் நடைபெற்று வந்தது. 1974-ல் துவஜ ஸ்தம்பம் அமைக்கப்பெற்றுக் கொடியேற்ற விழா நடைபெறத் தொடங்கியது. இப்போது ஆவணி உத்தர நக்ஷத்திரத்தில் கொடியேறி பதி னெட்டு நாள் மஹோற்சவம் நடைபெறுகிறது. பதினாறும் நாள் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும் மஹோற்சவம். மறுநாள் சண்டேஸ்வரி உற்சவம், கடைசி நாள் பூங்காவனம் என்பவை யாகப் பதினெட்டு நாட்களுக்கு விழா தொடர் கிறது.

1973-ம் ஆண்டிலிருந்து இங்கு திருவிழாக் காலங்களில் சமய அறிவுப் போட்டிகள் நடத்துவது வழக்கம்.

1980 ஆம் ஆண்டிலே புதியதொரு சித்திரத் தேர் அம்பிகைக்கு உருவாகியது.

நவராத்திரி, கேதாரகௌரி விரதம், திருவெம்பாவை, ஐப்பசி வெள்ளி ஆகிய தினங்கள் இங்கு வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் ஐந்து மைல் தொலைவில் ஊரெழு என்ற கிராமம் உள்ளது. சைவ உதயபானு என்ற சைவத் தமிழ்ப் பத்திரிகையை நடத்தியவரும் பெரும் புலவருமான திரு. சரவணமுத்துப் புலவர் பிறந்த ஊர் இதுவாகும். தெற்குப் புன்னாலைக்கட்டுவன் சந்திலிருந்து சுண்ணாகம் செல்லும் சாலையில் சுமார் அரை மைல் தொலைவில் உள்ளது இந்த மீனாக்ஷி அம்மன் ஆலயம். வீதிக்குத் தெற்கே கிழக்கு முகமாக அமைந்துள்ளது இப்பதி.

இவ்வாலயம் ச. துரைசாமி ஐயரவர்களால் ஸ்தாபிக்கப் பெற்றது. இவர் மாதம்பை மாரியம்மன் கோயிலில் அர்ச்சகராய் இருந்ததுடன் ஊரெழு மனோன்மணி அம்பாளின் மகோற்சவங்களில் ஒன்றைப் பக்தியோடு பொறுப்பேற்றுச் செய்து வந்தவர். சிறந்த சக்தி உபாசகரான இவர் தமது நீண்டநாட் கனவை நிறைவேற்றும் பொருட்டு 1922-ல் ஆலயத்தை ஸ்தாபித்தார்.

இவரின் மறைவிற்குப் பிறகு இவரது மனைவியாராகிய விசாலாட்சியம்மா தாமே தொடர்ந்து ஆலயத்தின் பூஜைவழிபாடுகளைச் செய்து வந்தார். பின்னர் மருமகனும், தற்போதைய குருக்களும், பரிபாலகருமாகிய மு. கிருஷ்ணசாமிக் குருக்கள் தொடர்ந்து ஆலயத்தைப் பொறுப்பேற்றார். இவர் காலத்தில் மிக வேகமாகவும் அதி சிறப்பாகவும் கோயில் திருப்பணிகள் வளர்ந்து வருகின்றன.

1977 இல் இவ்வாலயம் மின்னொளி பெற்றது. புதிய பல திருப்பணிகளின் பின் 1979 இல் தை உத்தரத்தில் நயினை சிவஸ்ரீ. ஐ. கைலாசநாதக் குருக்கள், ச. பரமேஸ்வரக் குருக்கள், பூரண. தியாகராஜக் குருக்கள் முதலான சிவாசாரியார்களால் மஹா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இத்தினத்தை முன்னிட்டு வரும் பத்து நாட்களும் வருடாவருடம் லக்ஷார்ச்சனையும், சங்காபிஷேகமும் நடைபெறுகின்றன, இன்று வரை வளர்ந்து இனிதே அருள்வீசி வரும் கண்ணகியாளின் கருணையை வியந்தவாறு அருகிலேயே அடுத்த தலத்தை நாடுகின்றோம்.

# இலங்கைச் சோதிட ஆய்வு மன்றம்

இச் சங்கத்தின் ஐப்பசி மாதக் கூட்டம் (ஆதீனத்தில் வேறு நிகழ்ச்சி ஏற்கெனவே 2.15க்கு ஆரம்பித்து நடந்து கொண்டிருந்தமையால்) தற்காலிகமாக நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்துக்கு முன்னால் இருக்கும் தனியார் இல்லத்தில் மாலை 3-15 மணிக்கு திரு. செ. ந. நடராஜன் அவர்களின் தலைமையில் ஆரம்பமாயிற்று. சென்ற கூட்ட அறிக்கையும் பொருளறிக்கையும் முறையே செயலாளராலும் பொருளாளராலும் வாசித்து சரியென ஏற்கப்பட்டது.

அன்று பிரதம பேச்சாளரான திரு. மு. மு. மார்க்கண்டு தவிர்க்க முடியாத சூழ் நிலையால் சமுகம் தராமையால் அடுத்த கூட்டத்திற்கு பேசவிருக்கும் கூவல் பிரஸ்ன என்னும் விடயம்பற்றி திரு. வே. சின்னத்துரை சிலகுறிப்புகளை முன்னோடியாகக் கூறி அடுத்த கூட்டத்தில் அது பற்றி விரிவுரையும் செயல்முறையும் அமையுமென்றார். பின்பு சோதிடமலர் வாசகர் ஒருவர் அனுப்பிய சில வினாக்கள் சோதிட மன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இது ஆய்வு மன்றமான படியால் மாதம் மாதம் ஒரு விடயம் பற்றி அங்கத்தவர்கள் ஆய்வு நடத்த வேண்டுமென்று கேட்கப்பட்டது. அடுத்த முறைக்கு 7-10-84 இல் காலை 2-58க்கு சாவகச்சேரியில் பிறந்த ஒரு பிள்ளையின் சௌக்கியத்தைப் பற்றியும் அதன் பெற்றோரின் சௌக்கியத்தைப் பற்றியும் ஆராய்வுக்கு எடுக்குமாறு கொடுக்கப்பட்டது. பின்பு மாலை 3-45 மணியளவில் கூட்டம் இனிது நிறைவேறியது. அடுத்த கூட்டம் டிசம்பர் 25-ம் திகதி மீண்டும் கூடும்.

---

அயனம்சம்...... (25-ம் பக்கத் தொடர்ச்சி)
யிலிருந்து வெகு தூரத்தில் சென்று கொண்டிருக்கின்றது. இந்துக்கள் கண்டுபிடித்த நிரந்தர நிலை மின்னும் ஒரே தனி நட்சத்திரமாகிய சித்திரைக்கு 180 பாகை நேரெதிரில் அமையும்.

விதிக்கட்டின்றி அமைந்த இந்த நிரந்தர நிலைக்கும் உண்மையான சந்திப்பு (இளவேனிற் பகலிராச் சமநாள் நிலை) நிலைக்கும் இடையில் உள்ள தூரத்தையே ''அயனம்சம்'' என்று அழைப்பார்கள்.

# மாறி அமைந்த நட்சத்திர ஒழுங்கு

''அகளங்கன்''

நட்சத்திரங்களை எண்ணத் தொடங்கும்போது அசுவினி, பரணி... என்றே எண்ணத் தொடங்குகிறோம். இந்த வழக்கம் இடையிலிருந்து வந்ததே தவிர ஆரம்ப காலத்திலிருந்து அசுவினியையே முதல் நட்சத்திரமாகக் கொண்டார் என்று கூறுவதற்குச் சான்றுகள் இல்லை.

விக்கிரமாதித்தனின் அரசவைச் சோதிடரான வராஹமிகிரர் என்னும் சோதிட அறிஞரேதான் இந்த வழக்கத்தை ஏற்படுத்தினார் எனப் பல சோதிட ஆய்வாளர்கள் கூறியிருக்கிறார்கள். வராஹமிகிரருக்கு முன்பு கார்த்திகை நட்சத்திரத்தையே முதல் நட்சத்திரமாகக் கொண்டு எண்ணி வந்தனர் என்பதற்கு பல பழைய சோதிட நூல்கள் சான்று பகருகின்றன. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றெனப் போற்றப்படும் மணிமேகலையில் சில இடங்களில் கார்த்திகை நட்சத்திரத்தை முதலாகக் கொண்டு நட்சத்திரங்களை எண்ணும் முறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆபுத்திரனின் கையிலிருந்த அமுதசுரபி புத்த பீடிகையின் முன்னேயுள்ள 'கோமுகி' என்னும் பொய்கையிலே வந்து தோன்றும் நாளை தீபதிலகை என்னும் தெய்வம் மணிமேகலைக்குக் கூறுகிறது. இதனை சீத்தலைச் சாத்தனார்

''ஈங்கிப் பெரும்பெயர்ப் பீடிகை முன்னது
மாமலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிய
கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சி
இருதிள வேனிலில் எரிகதிர் இடபத்து
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்
மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்
ஆபுத் திரன்கை அமுத சுரபியெனும்
மாபெரும் பாத்திரம் மடக்கொடி கேளாய்!''

என்று மணிமேகலை பாத்திரம் பெற்ற காதையில் பாடியுள்ளார். இளவேனிற் காலமாகிய சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில் சூரியன் இடபராசியில் சஞ்சரிக்கும் காலமாகிய வைகாசி மாதத்தில் பதின்மூன்று நட்சத்திரங்கள் சென்றபின் வரும் நட்சத்திரத்தின் தினத்தில் அதாவது நட்சத்திரங்களின் நடுவிலே அமைந்துள்ள நட்சத்திரத்தில் அந்த அமுதசுரபி வந்து தோன்றும் என்று தீபதிலகை கூறுகிறது.

அந்த நட்சத்திரத்தை மேலும் விளக்குமுகமாக ''போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்'' என்று கூறுகிறது அத்தெய்வம். போதிநாதனாகிய புத்த பகவான் தோன்றிய நாள் வைகாசி மாதத்து விசாக நாளாகும். இதுவே இன்றும் வைகாசி விசாகம் என்று சிறப்பிக்கப்பட்டு பௌத்தர்களால் கொண்டாடப்படுகிறது. 'வெசாக்' பண்டிகை என்று பௌத்த சிங்களவர்கள் கூறும் நாளே இந்தவைகாசி விசாக நாளாகும்.

எனவே விசாக நட்சத்திரம் இருபத்தியேழு நட்சத்திரங்களின் நடு நட்சத்திரமாக வருவதாயின் கார்த்திகை நட்சத்திரமே முதல் நட்சத்திரமாக எண்ணப்படல் வேண்டும் என்பது தெளிவாகிறது. கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து பதின்மூன்று நட்சத்திரங்கள் சென்றதும் வரும் விசாக நட்சத்திரத்தையே இங்கு ''ஒரு பதின் மேலும் ஒரு மூன்று சென்ற பின்'' எனக் குறிப்பிட்டார்கள். இந்த வழக்கத்தை வராஹமிகிரர் மாற்றி அசுவினியிலிருந்து எண்ணத் தொடங்கும் வழக்கத்தை ஏற்படுத்தியதற்கு பல காரணங்கள் உண்டு. சித்திரை மாதமே இந்துக்களின் வருடத் தொடக்கமாகும். சித்திரை மாதம் முதலாம் திகதி சூரிய பகவான் மேட இராசியில் பிரவேசிப்பார். அந்த வீடே அவருக்கு உச்ச வீடாகவும் அமைந்துள்ளது.

மேட இராசியில் இருக்கும் அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் சூரிய பகவான் சஞ்சரித்தே இடப இராசிக்குள் வைகாசி மாதத்தில் பிரவேசிப்பார்.

இதனால் வருடத் தொடக்கம் சூரியனின் உச்ச வீடான மேடத்தில் அசுவினி நட்சத்திரத்திலே சூரியன் பிரவேசிப்பதிலிருந்து தொடங்குகிறது. இதன் காரணமாக அசுவினியை முதல் நட்சத்திரமாகவும், மேடத்தை முதல் இராசியாகவும் ஏற்படுத்தியிருக்கிறார் வராஹமிகிரர் என எண்ணத் தோன்றுகிறது.

# உயர்கல்விப் பலன் உண்டா?

சி. ஜெயராணி, கோவிலாக்கண்டி, கைதடி,

சந்: 23-11-1957 சனிக்கிழமை இரவு 12-30 க்கு பிறந்துள்ளேன். சனிக்கிழமை 12மணி 30நிமிடத்தில் பிறந்தபடியால் 23-ம் திகதி சரியா அல்லது அடுத்தநாள் 24-ம் திகதி சரியா என அறியத்தருக.

நிவி: 24-11-1957 என்பதே தங்களின் சரியான பிறந்த திகதியாகும்.

சு. கந்தசாமி, எழுமட்டுவாழ்.

சந்: ஒருவருக்குக் கல்வித்துறை தடைப்படுவதின் காரணம் யாது? கல்வித்துறை எத்தனையாம் வீட்டால் அறியப்படும்? என்ன துறையில் ஒருவர் கல்வி கற்பார் என்பதை எப்படி நிர்ணயிப்பது என்பதை விபரமாகத் தருக.

நிவி: ஒருவரின் பட்டதாரிக்கல்வியை 4-ம் இடத்தைக் கொண்டும், சுயகல்வியை 2-ம் இடத்தைக் கொண்டும் அறியலாம். 4-ம் இடத்தில் பாபிகள் இருக்க 4-ம் இடத்திற்குரியவன் துர்ஸ்தானத்தில் இருப்பின் கல்வி தடைப்படும், கல்வித்துறையில் சூரியன் வைத்தியத்துறையையும், புதன் கணிதம், கணக்காண்மைத்துறையையும், சனி, வெள்ளிபொருளாதாரத்துறையும், செவ்வாய் கிருஷிகப்பகுதியையும், சனி கட்டிடக்கலை, பூமிசாத்திரத்தையும். சூரியன், ராகு அரசியலையும், சந்திரன் பாசை, மனையியல், என்பவற்றையும், சுக்கிரன், நடனம், சங்கீதத் துறையும், ராகு தூது செல்ஞானத்தையும், கேது மூலிகை வைத்தியம் முதலியவற்றையும் பொதுவாகக் குறிக்கும். இவை 4-ம் இடத்துடன் தொடர்பு பெற்றிருக்கவேண்டும். குறிப்பிட்ட கிரகங்கள் கெட்ட ஸ்தானங்களுக்கு அதிபதியாக இருந்தால் குறிப்பிட்ட கல்வியில் தோல்வியையே கொடுக்கும். இருகிரக சேர்க்கை, மூன்று கிரகசேர்க்கை அல்லது பார்வையேற்படின் அதற்கு மாதிரி விஷயங்கள் மாறுபடும். கிரகங்கள் யோககாரகராக இருப்பின் குறிப்பிட்ட பாடங்களின் முன்னேற்றம் ஆதாரமாக இருக்கும்.

குறிப்பிட்ட கல்வித்துறையில் முன்னேறிக் கொண்டு போகும் வசதிகள் கிடைப்பதை சித்தாம்ச சக்கரத்தின் நிலையைக் கொண்டே அறியலாம்: இது கிரகநிலையை 24 கூறுகப் பிரித்துக் காணப்படும் சக்கரமாகும். இதில் கிரகங்கள் கேந்திர திரிகோணங்களில் இருப்பின் அவ்வக்கிரக தசைகளில் கல்வித்துறை முன்னேறிக் கொண்டு செல்லும் என்பதை அறியவும், இவைபற்றி மேலும் விபரிக்க இங்கு இடம் போதாது.

க. நல்லையா, காத்தான்குடி.

சந்: 22-3-1957 முன்னிரவு 7-16க்குப் பிறந்த எனக்கு இரு ஜாதகக் குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன. ஒரு ஜாதகத்தில் உதயலக்கினம் கன்னி எனவும், மற்றையதில் துலாம் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. இதில் எது சரி? நட்சத்திரம், கிரகநிலை, மகாதசை என்பவற்றையும் அறியத்தரவும்?

நிவி; உதயலக்கினம் கன்னி என்பதே சரி. மேடத்தில் - கேது, இடபத்தில் - குஜன், கன்னியில்-குரு, துலாத்தில் - ராகு, விருச்சிகத்தில் - சனி, தனுவில் - சந்திரன், மீனத்தில் - சூரியன், புதன், சுக்கிரன், நட்சத்திரம் - மூலம் 1-ம் பாதம். கேது மகாதசையில் இருப்பு 8 வருடம் 1மாதம் 10 நாள்.

## சந்தேக நிவிர்த்தி 'மகம்'

வி. ரி. ஆர். ராம், வெள்ளவத்தை.

சந்: 9-4-1948 காலை 5-40 மணிக்குப் பிறந்த எனக்கு ஜனன காலத்தில் புதன் மகாதசையில் இருப்பு 13வரு 4மீ 2நாள். தற்போது எனக்கு என்ன மகாதசை புத்தி நடக்கிறது?

நிவி: தற்போது சுக்கிரமகாதசையில் புதன்புத்தி நடக்கின்றது. இது 1987-6-11 வரை இருக்கும்.

சி, விமலராணி, கோவிலாக்கண்டி, கண்டி.

சந்: நான் 27-2-1966 அதிகாலை 2-25க்குப் பிறந்தேன். எனது லக்கினம், நட்சத்திரம் என்பவற்றை அறியத்தருக.

நிவி: உதயலக்கினம் - தனுசு, நட்சத்திரம் - பரணி 4-ம்பாதம். இராசி - மேடம்.

இரா. கருணாகரன், பெரியமடு.

சந்: 27-11-1964 அதிகாலை 3மணி 5 நிமிடத்தில் பிறந்த எனது நட்சத்திரம், இராசி, லக்கினம், என்பவை யாது?

நிவி: உதயலக்கினம் - கன்னி, நட்சத்திரம் - பூரம் 2-ம் பாதம். இராசி - சிங்கம்.

(31-ம் பக்கம் பார்க்க)

# "சோதிடம் கற்போம்"

ஞானி

**சகோதர பாவம்**

மூன்றும் பாவத்தின் முக்கிய காரகம் சகோதரராகும். இதனுல் இப்பாவம் சகோரதரபாவம் எனப்படும்.

மூன்றும் பாவத்தின் காரகங்கள் சகோதரர், வீரியம்; போகம், காது, பிரயாணம் ஆகியன வாகும்.

கிரக பெலங்களுள் திருஷ்டிபெலம் முக்கியமானது. திருஷ்டி என்பது பார்வை. சுபக்கிரக பார்வையாற் சுப பலனும், பாபக்கிரக பார்வையால் அசுப பலன்களும் ஏற்படுமென்று பொதுவாகச் சொல்லப்படும்! பார்க்கும் கிரகத்தின் ஆதிபத்தியத்தால் அப்பார்வை எவ்வாறு செயற்படுமென்று அறிதல் வேண்டும். உதாரணமாக இலக்கினுதிபன் பாபியாக இருந்தாலும் அவரின் பார்வை சுப பலனுக்குரியது. அட்டமாதிபன் சுபனுக இருந்தாலும் அவருடைய பார்வை கஷ்ட பலன்களையே காட்டும். குரு அட்டமாதிபதியானுலும் அவர் பார்வை அதிக கஷ்ட பலனைக் கொடுக்காது. சனி அட்டமாதிபனுயாயின் அவரி பார்வை குரூர பலனுக்கு ஏதுவாகும்.

கிரகங்களின் பார்வையினுல் நற்பலன்களும் துர்ப்பலன்களும் ஏற்படுதல் போலச் சேர்க்கையினுலும் ஏற்படும். இவ்வாறு சேர்க்கையிலும் ஆதிபத்தியபலன் கவனிக்கவேண்டும். 6,8,12-ம் வீட்டதிபர்கள் சுபராயினும், அவர் சேர்க்கை நன்றன்று. இலக்கினுதிபன் பாபராயினும் அவர் சேர்க்கை நன்று.

திருஷ்டிபெலம்: சனி தானிருக்கும் ஸ்தானத்திலிருந்து மூன்றும் பத்தாம் இடங்களையும், குரு ஐந்தாம் ஒன்பதாம் இடங்களையும், செவ்வாய் நான்காம் எட்டாம் இடங்களையும் எல்லாக் கிரகங்களும் 7-ம் இடத்தையும் பார்ம்பர். இது பொதுவான விதியாகும், பாகைக் கணக்குகளை வைத்து பார்வையை அறியும் முறையை ருதிரோற்காரி கார்த்திகை இதழ் 25-ம் பக்கத்தில் பார்க்கலாம்,

மூன்றும் பாவதிபதியும் மூன்றும் பாவத்திலுள்ள கிரகமும் மூன்றும் பாவமும் பாபக்கிரகங்களின் திருஷ்டி சேர்க்கை என்பவற்றுல் பழுதடைவதாக வைத்துக்கொண்டால் இளைய சகோதர பலன் குன்றும். இராசிமண்டலத்தில் மூன்றும் இராசியாகிய மிதுனமும், அதன் அதிபதியாகிய புதனும் பாபக்கிரகசம்பந்தமுற்றிருந்தால் இங்கு கூறிய பெலவீனம் அதிகரிக்கும். சுபக்கிரக சம்பந்தம் பெற்றிருந்தால் தோஷம் குறையும்

இராகு கேதுக்கள் பாம்பு உருவினர். இவை சில குறிப்பிட்ட பாவங்களிலிருப்பின் அப்பாவ காரகங்கள் பழுதடையும். இப்பழுதை நாகசாபம் என்று சொல்வர். மூன்றும் பாவத்தில் இராகு அல்லது கேது இருப்பின் நாகசாபத்தால் சகோதரபலன் குன்றும். ஐந்தாம் பாவத்திலிருப்பின் புத்திரபலன் குன்றும்.

ஒரு பாவத்துக்கு இரு புறமுமுள்ள பாவங்களில் பாபர்கள் இருப்பின் அப்பாவம் பாபர் மத்தியம் ஏற்பட்டு குறித்த வீடு பழுதடையும் அப்பாவத்திலுள்ள கிரகங்களும் பழுதடைவர். ஒரு இராசிக்கு இருபுறமும் இருப்பதாகக் கூறிய பாபருள் ஒருவர் வலஞ்சுழியாகவும் மற்றவரிடஞ்சுழியாகவும் ஒருவரையொருவர் நோக்கி கத்தரிக்கோல் நறுக்குவது போல் அணுகினுல் பாபகர்த்தரி யோகம் எனப்படும். இது துர்ப்பலனுக்கே சரியது. இந்த யோகம் மூன்றும் பாவத்துக்கு இருப்பின் பிற் சகோதர அரிட்டங் கூறலாம். சகோதர காரனுகிய செவ்வாய் பெலமடைந்திருப்பின் தோஷசாந்தி உண்டு; இருவரும் பழுதடையின் தோஷம் மிகக்கூடுமென அறிக.

(தொடரும்)

கணித சுத்தமுடையது

**திருக்கணித பஞ்சாங்கம்**

சந்தேக... (29-ம்பக்கத் தொடர்ச்சி)

K. T. சம்பந்தன், மணல்தரை லேன், கந்தர்மடம்.

சந்: வடதென் அட்சங்களுக்கு குணகம் கணிக்கும் முறை என்ன? அஹஸ் காண்பது எவ்வாறு?

நிவி: Log tan Latitude of place - Log. tan Lat of Jaffna. = Log குணகம் என்றபடி குணகம் கணிக்கலாம்.

| | | |
|---|---|---|
| உ+ம் Log tan Lat Apura | 8பா 21 | = 9.16665 |
| Log tan Lat Ja. | 9பா 40 | = 9.23130 |
| Log குணகம் | | 9.93535 |
| | | = .86 |

அனுராதபுரத்துக்கு குணம் 86.

இதேபோல் எல்லா இடங்களுக்கும் குணகம் செய்து கொள்ளலாம். தென் அட்சங்களுக்கு அஹஸ் கணிக்கும் போது வட அட்சத்திற்குரிய அஹஸுக்கு எதிர்மாறாகக் கொள்க. வடஅட்சம் 10 பாகைக்கு அஹஸ் 30-10 ஆயின் தென் அட்சம் 10பாகைக்கு 29-50 எனக்கொள்க.

சந்: வட அக்ஷத்துக்கு குறிக்கப்பட்ட சூரிய உதயத்தை தென்னக்ஷங்களுக்கு எப்படி பின்பற்றுவது?

நிவி: ஓர் குறிப்பிட்ட அட்சத்துக்குரிய சூரிய உதயத்துக்கும் 6மணிக்குமுள்ள வித்தியாசத்தை அதே தென் அட்சத்துக்குப் பாவிக்கும் போது 6க்கு கூடியிருந்த தினமாயின் 6மணியிற் கழித்தும், குறைந்த தினமாயின் 6மணியுடன் கூட்டியுங் கொள்க. வட அட்சம் 10பாகையில் 6-10 ஆயின் தென் அட்சம் 10பாகையில் 5-50 எனக் கொள்க.

## இராஜ யோகம்

6-ம், 8-ம் இராசியதிபர்கள் நீசராசிகளிலிருந்தாலும் அல்லது இவர்கள் இருக்கும் இராசியதிபர்கள் நீசமடைந்திருந்தாலும் ஜாதகன் அரசனுக்கு ஒப்பானவனாக இருப்பான்.

10-ம் இராசியதிபதியும், 5-ம் இராசியதிபதியும் கூடி இருந்தால் ராஜயோகமுண்டு. பாக்கிய ஸ்தானாதிபன் கர்ம ஸ்தானாதிபனுடன் கூடியிருந்தாலும் ராஜயோகம் ஏற்படும்.

கர்ம ஸ்தானத்தில் நான்கு சுபக் கிரகங்கள் இருந்தாலும் அல்லது நான்கு கிரகங்கள் கர்ம ஸ்தானத்தைப் பார்த்தாலும் ஜாதகன் துறவியாவான்.

சந்திரனுக்கு 10-ல் குரு, சுக்கிரன், புதன் இவர்கள் இருந்தால் அந்த ஜாதகன் அரச குலத்திற் பிறந்தாலும் சன்னியாசியாவான்.


## ஜோதிட ஆலோசனைகள்

உங்கள் எதிர்காலத்தை எமது ஆலோசனைகள் மூலம் வளம்படுத்த தினமும் எம்மை நாடிவரும் அநேக அன்பர்களில் ஏன் நீங்களும் ஒருவராக இருக்கக்கூடாது? ஜோதிடம், அதிஷ்ட எண் ஞானம், கைரேகைகள், வீட்டுக்கு நிலம் வகுத்தல் சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படும்.

**சந்திக்கும் நாட்கள்**

சனி, ஞாயிறு, போயா நாட்களில் காலை 8-00மணி தொடக்கம் பிற்பகல் 6-00 மணி வரையும், கிழமை நாட்களில் சந்திக்க வேண்டுமாயின், முன்னேற்பாடாகத் தொடர்பு கொள்ளவும்.

**மகாதேவா ஜோதிடம்**

140, செல்லர் வீதி,

(கல்வியங்காடு சந்தை அருகாமை)

நல்லூர் — யாழ்ப்பாணம்


## உயிர்கொண்ட துணை நீ அல்லவோ?

"கோப்பாய் - எஸ். சிவம்"

அலைமோதுங் கடலுக்கு அணை இல்லையே - அது
அதன் எல்லை தனைத்தாண்டி வரவில்லையே
குலை போடும் வாழைக்குக் கிளை இல்லையே - அது
குலை தன்னைக் குறையாகத் தரவில்லையே!

மலைமோதும் மேகத்தில் மனம் இல்லையே - அது
மழை தந்து வளம் சேர்க்க மறக்கவில்லையே
சிலையாகும் கருங்கல்லில் உயிரில்லையே - அது
சிலையாகி எழில் சிந்த மறுக்கவில்லையே!

நிலையால்என் துணை நீஎன் றுனை நாடினேன் - நீ
சிலையல்ல; உயிர்கொண்ட துணை அல்லவோ?
அணைக்கின்ற கரம்உண்டு மனமும்உண்டு - ஏன் இந்த
அடியேனைச் சோதித்தல் தரமாகுமோ?

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 31

### முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்
2. 1-12-1984க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றுவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 31
சோதிடமலர்

மட்டுவில் — சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சா 1 | 2 | ப் 3 | 4 | 5 | ம் 6 |
| 7 | ■ | 9 | ம் 10 | 11 | 12 |
| தி 13 | 14 | 15 | 16 | க் 17 | 18 |
| 19 | ■ | 21 | ■ | 23 | ■ |
| 25 | 26 | ■ | 28 | க 29 | 30 |
| த 31 | 32 | 33 | ம் 34 | ■ | 36 |

பெயர் ..........................................

விலாசம் ..........................................

..........................................

இடமிருந்து வலம்:

1 இரு கிரகங்கள் ஒன்றுக்கொன்று அண்மித்திருப்பதை இச்சொல்லால் வழங்கப்படும்.

9 குழம்பியுள்ள இல்விராசியில் செவ்வாய் உச்சமும், வியாழன் நீசமும் அடைகின்றன.

13 ஒரு ராசியை மூன்று பங்காகப் பிரித்து பெறப்படும் மாறியுள்ள இவ்அம்ச சக்கரத்தின் மூலம் இளைய சகோதர பலன் ஆராயப்படும்.

25 சூரியன் கும்பராசியில் பிரவேசிக்கும் மாதம் இப்பெயரால் அழைக்கப்படும்.

28 தமிழ் வருடங்களில் ஒன்று குழம்பிவிட்டது.

31 மாறியுள்ள இந் நட்சத்திரத்தின் அதிபதி ராகு ஆகும்;

மேலிருந்து கீழ்:

1 இதன் இறுதியில் 'ம்' சேர வருவது சந்திரனைக் கொண்டு அறியப்படும் மாதமாகும்.

3 யோகங்களுள் ஒன்றுன மாறியுள்ள இது வெண்மை எனவும் பொருள்படும்.

4 உயிரற்ற மனித உடலை குழம்பியுள்ள இதனல் வழங்குவர்.

5 எழுத்துக்களை ஒழுங்காக்க 'இலக்கம்' ஏற்படலாம்.

6 சனி விரதநாட்களில் தலைகிழாயுள்ள இதற்கே முதலில் உணவு கிடைக்கின்றது.

26 தலைமாறியிருக்கும் இதனை பகலில் காண முடியாது.

28 இதன் முன் 'ப' சேர வலிமை உண்டாகும்.

30 உத்தராட நட்சத்திரத்துக்குரிய யோனி இது.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.30ன் விடைகள்**

இடமிருந்து வலம்!

1. தீபாவளி 7. சதுர் 11. வேளை 15. மாந்தை 19. விரதம் 26. அருக்கன் 31. மதுரை 35. கதி

மேலிருந்து கீழ்:

1. துவிதீயை 2. பார் 3. வசந்தருது 6. காளை 11. வேதை 16. அம்மா 20. மகர 24. திக்கு 29. கன்(னி)

பரிசில் பெறுவோர்:

1-ம் பரிசு: சி. அழகதுரை,
அம்மன் கோவிலடி, தொண்டமானுறு.

2-ம் பரிசு. வே. தம்பையா,
'கலையகம்' சித்தன்கேணி.

3-ம் பரிசு: செ. கருணுகரன்,
தோலகட்டி ஒழுங்கை, வசாவிளான்.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.


அபிவிருத்திப் பாதையில், ..........

யாழ்ப்பாணத்து நீர்வளம் குளங்களில் தங்கியுள்ளது.

காலந்தோறும் குளங்களை ஆழமாக்குவோம்

குளங்களில் அதிகளவு நீரைத் தேக்குவோம்

குளத்துநீர் பெருக்கால் கிணற்று நீரைப் பெருக்குவோம்

யாழ்ப்பாணத்து மூலவளம் பனைவளம் என்போம்

பனையை அதிகமாக வளர்த்துப் பயன் பல பெறுவோம்

வீதியோரங்களில் நிழல்மரம் நடுவோம்

வீட்டுத் தேவைக்கு எலுமிச்சை, தோடை நடுவோம்

விறகுத் தேவைக்கு சவுக்குமரம் உண்டாக்குவோம்

தென்னந்தும்பு பனந்தும்பு பயன்தர வழி செய்வோம்.

★ குளம் தோண்டல் ★ மரம் நடுதல் ★ பனை அபிவிருத்தி

என்பனவற்றிற்கு மில்க்வைற் தொழிலகம் உதவும்.

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை சேகரித்து கொடுத்து பரிசுகளைப் பெறவும்.

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

# சனி மாற்றப் பலாபலன்கள்

21-12-84-ல் ஏற்படும் சனிமாற்றத்தினால் நிகழவிருக்கும் உலக பலாபலன்களும் பன்னிரு ராசிகளுக்குமுள்ள பலாபலன்களும் அடங்கியது.

விலை ரூபா **4-00** (தபாற் செலவு 60 சதம்)

10 வீத கழிவுடன் முற்பணம் அனுப்பும் வியாபாரிகளுக்கு தபாற் செலவு இனாம்.

விபரங்களுக்கு:

## திருக்கணித நிலையம்

மட்டுவில், சாவகச்சேரி.


Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 260